Registered as a News Paper  பக்கங்கள் 08  விலை ரூபா: 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 03  திருவள்ளுவர் ஆண்டு 2023  ஆடி 23  [07-08-1992]  வெள்ளிக்கிழமை  ஓசை 171

## இடம்பெயர்ந்த அதிபர்கள் ஓய்வூதியம் பெறவசதி

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் இராணுவ நடவடிக்கைகளினால் அழிந்த, சேதமுற்ற, இடம்மாறி வேறு இடங்களில் இயங்கும் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்கள் இனிமேல் அரச சொத்துக்களைக் கையளித்தற்கான பத்திரங்கள் இல்லாமல் ஓய்வூதியத்தைப் பெறலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான சுற்று நிருபம் ஒன்றை வடக்கு கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு அனைத்துக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அனுப்பியுள்ளது. சேவையிலிருந்து இளைப்பாற விரும்புபவர்கள் (8ஆம் பக்கம் பார்க்க)

## ★ ஏழாலை ★ அராலி ★ பூனகரி

# ராணுவம் அகோர எறிகணை தாக்கு

# சிறுமி பலி: 8 பேர் காயம்

(நமது நிருபர்)

சிறிலங்கா இராணுவம் நேற்று நடத்திய கண்மூடித்தனமான எறிகணை வீச்சினால் பாடசாலை சென்று திரும்பிய சிறுமி ஒருத்தி கொல்லப்பட்டதுடன் 7 பாடசாலைச் சிறுவர்கள் உட்பட எட்டுப் பேர் காயமடைந்தனர். சில வார இடைவெளிக்குப் பின்னர் நடத்தப்பட்ட இந்த எறிகணை வீச்சு ஏழாலை, அராலி, பூனகரிப் பகுதிகள் மீது நடத்தப்பட்டது.

பலாலி சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட எறிகணை ஏழாலையில் வீழ்ந்துவெடித்ததால் பள்ளிச் சிறுமி ஒருவர் பரிதாப மரணத்தைத் தழுவிக்கொண்டதுடன் பாதசாரி ஒருவர் உட்பட எட்டுப் பாடசாலைச் சிறுவர்கள் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுக்காலை 11.30 மணியளவில் ஏழாலைமேற்கு சைவ சன்மார்க்க வித்தியாலயத்தில் நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சைக்கான விசேடவகுப்பு முடிந்து வீடு திரும்பிக்கொண்டிருந்தபோதே பாடசாலைக்குச் சமீபமாக எறிகணை வீழ்ந்து வெடித்தது.

இதன்போது தம்பிராசா ஷர்விழி (வயது 10) என்ற சிறுமி யாழ். போதனாவைத்தியசாலைக்கு எடுத்து வரப்படும் வழியில் பரிதாபகரமாக [7 ஆம் பக்கம் பார்க்க]

## வீரச்சாவு

### வீரவேங்கை சிவதர்சன்

மட்டக்களப்பு மாவட்டம் அம்பிலாந்துறையில் 03-08-92 அன்று காலை 7.00 மணியளவில் சிறிலங்கா இராணுவத்துடனான மோதலில் ஒரு போராளி சயனைட் அருந்தி வீரச்சாவு அடைந்தார்.

வீரச்சாவடைந்த வீரவேங்கை சிவதர்சன் (மதிகரன்- கற்பூரப்போடி கோபாலபிள்ளை, நாகமுனை குருக்கள் மடம், மட்டக்களப்பு) என்னும் போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## விமான நடமாட்டம் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டின் வான் பிராந்தியத்தில் நேற்று சிறிலங்கா விமானப்படையினரது விமானங்களினதும் உலங்கு வானூர்திகளினதும் நடமாட்டம் அதிகமாகக் காணப்பட்டது.

தீவக கரையோரப்பகுதிகளிலும், ஏனைய பகுதிகளிலும் [7 ஆம் பக்கம் பார்க்க]

## பலாலியில் யுத்தகால சிவில் நிர்வாக அமைப்பு?

(கொழும்பு)

யாழ். குடாநாட்டை விடுதலைப் புலிகளின் பிடியிலிருந்து மீட்டெடுக்கும் போராட்டத்தை தொடங்குவதற்கு முன்னோடியாக சிறிலங்கா இராணுவத்தினர் பலாலியில் யுத்தகால சிவில் நிர்வாக அமைப்பு ஒன்றை உருவாக்க இருப்பதாக மிக நம்பகமாக தெரியவருகிறது என்று கொழும்புப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இதற்கான ஏற்பாடுகள் சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் (7 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தின் புதிய யுக்திகளால் வெற்றி கொள்ள முடியவில்லை

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் புலிகளின் அதிரடித் தாக்குதல்களில் ஏற்படும் உயிரிழப்புகளை அடுத்து புதிய யுத்திகளை வகுப்பதில் இராணுவதரப்பில் பெரும் குழப்பம் நிலவுகிறது.

புலிகளின் தாக்குதல்களால் பெரும் உயிரிழப்புகள்ஏற்படும் ஒவ்வொரு தடவையும் புதிய தந்திரோபாயங்கள் வகுக்கப்படுவதாக இராணுவ தரப்பில் தெரிவிக்கப்படுகின்ற போதிலும் இழப்புகள் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன.

கடந்த வாரமும் புதிய போர் முறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டு விட்டதாக அறிவிக்கப்பட்டபோதும் 65 இராணுவத்தினர் புலிகளின் தாக்குதலுக்குப் பலியாகினர் என ஏ.எவ்.பி. செய்தியாளர் சுட்டிக் காட்டியுள்ளார்.

கடந்த ஒரு மாத கால கட்டத்தில் 120 பேரை இராணு (7 ஆம் பக்கம் பார்க்க)

## விமானத்திலிருந்து புதிய ரகக் குண்டு

(வவுனியா)

வவுனியாவில் குண்டு வீச்சு விமானத்திலிருந்து புதிய ரக குண்டொன்று மக்கள் குடியிருப்பை நோக்கி ஏவப்பட்டது.

கடந்த முதலாம் திகதி தவசியாகுளம்பகுதியில் இக்குண்டு வீச்சு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. வெடித்துச் சிதறிய குண்டிலிருந்து பல்லாயிரக்கணக்கான சன்னங்கள் வீடுகளையும், தளபாடங்கள், உபகரணங்களையும் துளைத்துள் (7 ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம் கவுன்சிலுக்கான அதிகாரம் குறித்து பேச்சு

(கொழும்பு)

இணைந்த வட-கிழக்கு மாகாணசபையின் கீழ் உருவாக்கப்படும் முஸ்லிம் கவுன்சிலுக்கு வழங்கப்படவிருக்கும் அதிகாரங்கள் மற்றும் முஸ்லிம் கவுன்சிலுக்கு வெளியே வாழும் முஸ்லிம்களுக்கு வழங்கப்படும் பாதுகாப்புத்தொடர் (8 ஆம் பக்கம் பார்க்க)

## 2ஆம் கட்ட வினாத்தாள்கள் இன்று எடுத்து வரப்படும்

நடைபெற்றுவரும் க. பொ. த. உயர்தரப் பரீட்சைக்கான இரண்டாம் கட்ட வினாத்தாள்கள் இன்று யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட உள் [8 ஆம் பக்கம் பார்க்க]



வவுனியா இறப்பமடுவில் 04-08-1992 அன்று சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் புலிகளால் கைப்பற்றி அழிக்கப்பட்ட 'பவல்' கவச வாகனத்தை மேலே காணலாம். இந்த வாகனத்திலிருந்து சக்திவாய்ந்த ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

"கூவு குயிலே"

நாளை மாலை 5 மணிக்கு
யாழ். இந்துவில்

அனைவரையும் அன்புடன்
அழைக்கின்றோம்

நிதர்சனம்
தமிழீழம்  (சி/4837)

## வரி விளம்பரம்

### புதிய மீரா நாவல்

1992 இல் வெளிவந்தவை ''ஒரு இல்லத்தில் சில உள்ளங்கள்'' (வாமதேவன்) ''மீண்டும் புதிதாய்ப் பிறப்போம'' (சிதம்பர திருச்செந்திநாதன்) '' விண்ணில் அல்ல விடிவெள்ளி''(தாமரைச் செல்வி) யாழ்ப்பாணம், சுன்னாகம், சாவகச்சேரி, நெல்லியடி புத்தகசாலைகளில் விற்பனையாகின்றது. (2952)

### தையல் இயந்திரங்கள்

தையல் இயந்திரங்களை வாங்கவும், விற்கவும், பழுதடைந்த தையல் இயந்திரங்களை உங்கள் வீட்டிலேயே வைத்துத் திருத்தவும், உதிரிப் பாகங்களைப் பெற்றுக் கொள்ளவும், தையல் இயந்திர விற்பனை நிலையம், கண்டி வீதி, சாவகச்சேரி. (2953)

### ஆங்கில ஆசிரியர் தெரிவுப் பரீட்சை

நாளாந்த துரித மீட்டல் பயிற்சி வகுப்புக்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஆசிரியர்கள் திரு. T.N. பஞ்சாட்சரம், திரு. K. சபாநாயகம்.

JAFFNA TECHNICAL INSTITUTE, No. 4, பிள்ளையார் லேன் (வளாக ஒழுங்கை முன்பாக) திருநெல்வேலி. (2967)

### விற்பனைக்கு

''ஒலிவ்'' ஸ்நானத்தில் நம் முந்தையோர் கண்ட முறைமையில்உற்பத்தி செய்யப்படும் இயற்கை ஸ்நானப்பவுடராகும். அழுக்கை அகற்றுவதுடன் கண்ணுக்கும் குளிர்ச்சியானது, அண்ணா கோப்பி கடைகளிலும் கிடைக்கும். (சி 4825) - ''மில்க்வைற்''

### வகுப்புகள் (புதிய ஆண்டு-5)

ஆண்டு 4-இல் கல்வி பயிலும் மாணவர்களுக்கு புலமைப் பரிசில் பரீட்சையை முன்னிட்டு திறமைக்கேற்ப தரம் பிரிக்கப்பட்டு புதிய வகுப்புகள் 08-08-92 சனி 2-00 மணிக்கு ஆரம்பமாகின்றன. மாணவர் தொகை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. 08-08-92க்கு முன் பதிவு செய்யவும். புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி. யாழ்ப்பாணம். (2979)

## இன்று

நல்லூர் உற்சவகால தெய்வீக இசையரங்கில் இன்று வர்ண ராமேஸ்வரன் பாட உள்ளார். இவருக்குபக்க வாத்தியக் கலைஞர்களாக வயலின் கோபிதாஸ் அவர்களும் மிருதங்கம் எஸ். துரைராஜா அவர்களும் பங்கேற்க உள்ளனர்.

### ஆதாரம் காட்டி பெற்றுக்கொள்ளவும்

நல்லூர் ஆலய உற்சவ காலத்தில் ஆலயப் பகுதியில் மக்களால் தவறவிடப்பட்ட பொருள்கள் பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள தமிழீழ காவல் துறையின் உற்சவ கால பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

ஆண்கள் உபயோகிக்கும் இரண்டு கைக்கடிகாரங்கள், ஒரு பணப்பை, துவிச்சக்கர வண்டி திறப்புகள் 11 ஆகியனவேகாவல்துறையினரிடம்ஒப்படைக்கப்பட்டுள்ளவையாகும் இப் பொருள்களின் உரிமையாளர்கள் தமிழீழ காவல் துறையின் நல்லூர் உற்சவ கால பணிமனைப் பொறுப்பாளரிடம் அவற்றை அடையாளம் காட்டி பெற்றுக்கொள்ளலாம் என தெரிவிக்கப்படுகிறது.

## உணவுக் களஞ்சிய மோசடி புலனாய்வுதுறைவிசாரணை


அரசிற்கு சொந்தமான கந்தளாய் மற்றும் நுவரெலியாவில் இருக்கும் இரண்டு உணவுக் களஞ்சியங்களில் இடம்பெற்ற மோசடியை பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் விசாரித்து வருகின்றனர் என தெரியவருகின்றது.

இக் களஞ்சியங்களில்அரிசியும் மாவும் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன. இலங்கையில் இதுவரை இடம் பெற்றிராத அளவிற்கு பெரிய மோசடி என வர்ணிக்கப்படும் இம் மோசடியில் பில்லியன் ரூபா கணக்கான உணவுப் பொருள்கள் கையாடப்பட்டுள்ளன.

உயர் அரச அதிகாரிகளும், முன்னாள் களஞ்சிய ஊழியர்களும் இதில் பங்கு கொண்டுள்ளனர்மோசடியில்சம்பந்தப்பட்டோரின் சொத்துகள் பொலிசாரினால் கையகப்படுத்தப்பட்டுள்ளன.

## ஓராண்டு நினைவஞ்சலி

வீரப்பிறப்பு 02 — 08 — 1966



வீரச்சாவு 05 — 08 — 1991

05-08-1991இல ஆ. க. வெ இராணுவ நடவடிக்கையின் போது கடடைக்காட்டில் தரையிறக்கப்பட்ட இராணுவத்தை எதிர்த்து புல்லாவெளியில் மேற்கொள்ளப்பட்ட அதிரடித் தாக்குதலின் போது வீரச்சாவடைந்த

### லெப்டினன்ட் நிதி

(நடராசா ஜெயராசா)

பேசாலை, மன்னார்

திதி: 07· 08· 1992

செந்தமிழ் ஈழத்தின் செழுமை தனைச்சிதைத்து-எம்
செங்குருதியினைக் குடிக்க நினைக்கும்
சிங்களப் படைகளின் இனவெறி அடக்கிட
செங்களமாடிய சிறுத்தைப்புலியே - எங்கள் நிதியே
கல்லறைக்கு நீ சென்றாலும்
காலத்தால் உன் புகழ் அழியாது
நீ மடியவில்லையடா உன்கதை முடியவில்லையடா.

இவருடைய ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்.

வட்டுவத்தை,
அல்வாய் கிழக்கு, - குடும்பத்தினர் (2963)

## 45-ம்நாள்கண்ணீர்அஞ்சலி



### திருமதி மகேஸ்வரியம்மா சிவாலிங்கம்

[ஓய்வுபெற்ற உதவி அதிபர், புனித சேவியர் பாடசாலை, திருக்கோணமலை]

பிறப்பு : 11 - 06 - 1936 இறப்பு : 24 - 06 - 1992

அம்மா...
எல்லாமே ஒரு இனிய
கனவு போலவே
தொடர்ந்தது
இடையில்
கனவுகுலைந்துவிழித்தபோது
நீ
இல்லை என்ற உண்மை
மட்டும்...
உன்
அன்பும். அரவணைப்பும்,
பாசமும், நேசமும் மட்டுமே
இனி என்றும்
எம் நினைவில்
நிலையாய்......

இறுதி நிகழ்வுகளில் நேரில் கலந்து கொண்டவர்களுக்கும் கடிதம் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் அந்தியேட்டிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் எமது நன்றிகள்.

கணவன், பிள்ளைகள், மருமகன்

466, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (2973)

## G.A.Q, First IN Com

யாழ் பேராதனை ) 1992-93

பல்கலைக்கழகங்களுக்கான விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன.

விபரங்களுக்கு:

S. அருள்நங்கை

### புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி - யாழ்ப்பாணம்

(சி/4840)

## நினைவு கூருகின்றோம் ...

### 1992 - 08 - 07

1984 ஆம் ஆண்டு இதே தினத்தில், வவுனியா - மன்னார் வீதி நெழுக்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 10 - தமிழர்கள்.

யாழ்ப்பாணத்தில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட 14 தமிழர்கள.

1987 ஆம் ஆண்டு மண்டைதீவில், சிறிலங்கா இராணுவத்தினரின் முகாமருகே எலும்புக் கூடுகளாக மீட்கப்பட்ட 2- தமிழர்கள்.

1989 ஆம்ஆண்டு மணலாறு/அளம்பில், நாயாற்றுப் பகுதியில் இந்தியப் படையினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய -

**வேந்தன்** (சண்முகம் பவானந்தராசா நிலாவெளி, திருக்கோணமலை)

**ஈசன்** (வேலுப்பிள்ளை மகேஸ்வரன் - மகேஸ்வரன் வீதி பண்டத்தரிப்பு அம்மன் கோவிலடி, தம்பசிட்டி)

**கர்ணன்** (சிவப்பிரகாசம் சிவகுமார் சரசாலைதெற்கு)

**ஜேம்ஸ்** (சிவசுப்பிரமணியம் மணிவர்ணன் - சந்தை மேற்கு ஒழுங்கை, பருத்தித்துறை)

புன்னாலைக்கட்டுவனில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 2- தமிழர்கள்- புத்தூரில், இந்தியப் படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட அதே இடத்தைச்சேர்ந்த தமிழ்ப்பொது மகன்.

1990ஆம் ஆண்டு யாழ். நல்லூர் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானக்குண்டு வீச்சில் வீரச்சாவெய்திய -

**பவி** (சுப்பிரமணியம் சிவராஜா - புற்றளை பருத்தித்துறை)

அம்பாறை / திருக்கோயில், சங்கமான் கண்டிப் பகுதியில், சிறிலங்காப் படையினரால் வெட்டிக்கொல்லப்பட்ட 47 தமிழர்கள்.

சமணங்குளத்தில்முஸ்லிம் குழுவொன்று மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்ட 3 - தமிழர்கள்.

வவுனியா - கல்மடு சர்வோதய சிறுவர் பாடசாலை இடம்பெயர்ந்தோர் முகாம்மீது சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் கொல்லப்பட்ட 5- தமிழர்கள் - செட்டிக்குளம் 10 ஆம் படிவப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு முகாமில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்ட 7தமிழர்கள்.

யாழ்-அத்தியடி, அம்பலவாணர் வீதியிலிருந்த எமது முகாமொன்றின் மீது சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட விமானக்குண்டு வீச்சில் வீரச்சாவெய்திய -

நாட்டுப்பற்றாளர்களான -

**ராசன்** (செல்வரெத்தினம் செல்வக்குமார் நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்)

**மாம்பழம்** (காசிலிங்கம் சிவபாலன் நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்)

இதேபகுதி, இதை அண்டிய பகுதிகள் மற்றும், மானிப்பாய் மருத்துவமனை, திருநெல்வேலி பொதுச் சந்தை ஆகியவற்றின் மீதும் சிறிலங்காப்படையினர் நாள் முழுவதும் மேற்கொண்ட விமானக்குண்டு வீச்சுத் தாக்குதல்களில் கொல்லப்பட்ட மாணவன் உட்பட 9 - தமிழர்கள்.

மட்டக்களப்பில், சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் கொல்லபபட்ட தளவாய், ஐயங்கேணிப் பகுதிகளைச்சேர்ந்த 2-தமிழ் இளைஞர்கள்.

1991ஆம் ஆண்டு ஆனையிறவு முகாமிலிருந்து வெளியேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**மேஜர் ஜொனி** (நாகநாதி ஜெகதீஸ்வரன் - மீசாலை வடக்கு)

**திசா** [சிவபாதலிங்கம் சிறிதரன் - இரணை இலுப்பைக் குளம், வவுனியா]

**திருணா** (குப்புசாமி மூர்த்தி - 3ஆம் வாய்க்கால், கிளிநொச்சி)

**குணேஷ்** [கருப்பையா திவாகரன் - தலைமன்னார் துறைமுகம், மன்னார்]

**ஜெனா** [சிறிதங்கராஜா சிறிநவநீதன் - மீசாலை வடக்கு, கொடிகாமம்]

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

### தமிழீழ விடுதலைப் புலிகள்

[சி/4835]




**வ**ல்லை! ஆம் பலமா வீரர்களும் போராளிகளும்சிறு வயதில் அள்ளி உடம்பெல்லாம் அப்பி விளையாடியமண். கடலின் உப்புக் காற்றை நெடுங்காலமாக சுவாசித்துக் கொண்டு இவ்வூரிற்கு இன்னும் பெருமை சேர்த்துக் கொண்டிருக்கும் அம்மன் கோவில். இக்கோவில் வீதியிலும் மதவடி கடற்கரையிலும் ஓடி, ஆடி தவழ்ந்தவன்தான் ஒட்டேகா. இரு பெண் சகோதரர்களிற்கு ஓர் ஆண்பிளளை என்பதனால் வீட்டில் செல்லம் அதிகம். அதனாலோ என்னவோ அவனது குழப்படிகளும் அதிகம்.



கப்டன்
**எல்லாளன்**
[ஒட்டேகா]

இன்றும் அந்த மண்களைக் கேட்டாலும் அவனது குழப்படிகளையும், குறும்புத் தனத்தையும் பக்கம், பக்கமாகச் சொல்லும். அவனது பாடசாலை நாட்களில் ஒருநாள் அவன் வகுப்பறைக்கு வரவில்லை. அவன் வராவிட்டால் அன்று வகுப்பறையில் பம்பல்கள் (பகிடி) குறைவுதான். ஏன் என்று விசாரித்ததில் அம்மன் கோவில் தேர் கொட்டகையில் புறா பிடிக்க ஏறி விழுந்து கால் முறிந்து விட்டதாம். இன்னொருநாள் சிவன்கோவில்குளத்தில் குளிக்கும் போது மண்டை உடைந்ததாம். இப்படியாகப் பாடசாலை நாட்களில் பல காயங்களையும், முறிவுகளையும் சந்தித்தவன்தான் ஒட்டேகா. இதனால் மூன்று மாதங்களாக பாடசாலைக்கு வரவில்லை என்றாலும் அந்த வருட பரீட்சையில் திறமையாகச் சித்தி எய்தினான்.

இப்படியான வாழ்க்கை ஓட்டத்தில் தான் இந்திய ஆக்கிரமிப்பாளர் காலடி எடுத்து வைத்தார்கள். சிறுவயது முதலே போராட வேண்டும் தமிழரிற்கு விடிவு ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணங்களைக் கொண்டிருந்த ஒட்டேகாவும் அவனது நண்பர்களும் இயக்கத்தில் சேர்வதற்காக வண்டி ஏறினர். அந்நேரம் அங்கு வந்த லெப். ஜோக்கின் அவர்கள் 'டேய் நீ வீட்டில் ஓர் ஆண்பிள்ளை எனவே நீ வீட்டை போ' எனக் கூறினார். அதற்கு ஒட்டேகா 'நான் போகமாட்டேன்' என்று கூறினான். ஆனாலும் அவர்கள் விடுவதாயில்லை. 'வண்டியை விட்டு இறங்கு' எனக் கூறினார்கள். 'நான் இறங்க மாட்டேன்' என்று அழுதான் ஒட்டேகா. ஒன்றும் செய்ய முடியாமல் அவனை அவர்களும் வழியனுப்பி வைத்தார்கள். அவன் தவழ்ந்து விளையாடிய மதவடி கடற்கரையும் வழியனுப்பி வைத்தது.

நெடிதுயர்ந்த மரங்களின் இடைகளிடையே பார்த்தால் ஆகக்கூடியது 50 மீற்றர் தூரம்தான் கண்களிற்குப் புலப்படும். இரவு நேரங்களில் கொடிய மிருகங்களின் கூச்சல், யானையின் பிளிறல் ஒலி, பாம்புகள் முதலியன ஊர்ந்து செல்லும்போது ஏற்படும் சருகுகளின் ஒலி, இரவு பகல் பாராது குரங்குகள் செய்யும் அட்டகாசம். இப்படியான அடர்ந்த காடு எங்களிற்கெல்லாம் புதிது. அதைவிட அங்கு நின்றவர்களின் பயமுறுத்தும் சொற்கள், ஆம்! 'இதிலிருந்து ஒரு மைல் அருகில் ஆமி நிற்கிறான். எனவே சத்தம்போடக்கூடாது' என்ற வெருட்டல்கள். இதுதான் IPKF வந்தவுடன் நடந்த முதலாவது பயிற்சி முகாம்.

இங்குதான் ஒட்டேகாவும் பயிற்சி எடுத்துக் கொண்டிருந்தான். ஓர் நாள்ஒட்டேகா தனிமையில் இருந்து ஏதோ சிந்தித்துக் கொண்டிருந்தான். நான் கிட்ட போய் நின்றதையும் கவனிக்கவில்லை. 'என்ன மச்சான் யோசிக்கிறாய்' என்று கேட்டேன். 'ஒன்றுமில்லை' என்றஒத்தை வார்த்தை பதிலாக வந்தது. ஒன்றுமில்லை என்று சொன்னதில் ஏதோ ஒன்று இருக்கிறது என்று புரிந்து கொண்டேன். நிச்சயமாக இவன் தனது தாயைப் பற்றித்தான் சிந்தித்திருப்பான். ஏனெனில் தாயின் நம்பிக்கைகளை சிதைத்து விட்டு வந்து விட்டான். வண்டி ஏறும்போதும் 'அம்மா கவலைப்படுவா, வேறு ஓர் பிரச்சினையும் இல்லை' என்று கூறியதுஎனது ஞாபகத்திற்கு வருகிறது.

பயிற்சி முகாமின் கஷ்டங்கள் நிறைய, அந்த கஷ்டங்களிற்கிடையே செல்வராஜா மாஸ்டரின் அன்பு வார்த்தைகள் எம்மை ஆறுதல் படுத்தும். இக் கஷ்டங்களிலும் ஒட்டேகா நிறம்பவும் கஷ்டப்பட்டான். ஏனெனில் எமது பயிற்சி முகாமில் உடம்பு கூடியவன் இவனே. ஆனாலும் அவ்வுடம்பைக் கொண்டு ஒழுங்காக பயிற்சிகள் செய்தான். அதனால் செல்வரஜா மாஸ்டர் றெயினிங் கஷ்டம் என்று கூறுபவர்களிற்கு ஒட்டேகாவை உதாரணமாகக் காட்டுவார்.

பயிற்சி முகாம் அவனை முற்றிலும் மாற்றியிருந்தது. ஆம்! அவனது உடம்பு அளவான உடம்பாக மெலிந்திருந்தது, அவனது உள்ளமோ! பழைய குழப்படிகள் எங்கோ ஓடிவிட்டிருந்தன, எந்தவொரு பொறுப்பாளரைக் கேட்டாலும் ''ஒட்டேகா அவன் அமைதியான நல்லபெடியன்'' என்றே கூறுவார்கள். எல்லா நேரங்களிலும் பகிடி விடுபவன் தன் போக்கை மாற்றியிருந்தான். வேலை நேரங்களில் வேலைகளில் கவனமாயிருந்தான். ஓய்வின்போது மட்டும் அளவோடுபகிடிகள்விடுவான்.

பயிற்சியின் பின் மணலாற்றுக் காட்டில் அவனது பணி தொடர்ந்தது. மணலாறில் இந்திய இராணுவத்திற்கெதிரான சண்டைகளில் முன்னின்று சண்டையிட்டான். அதன் பின் இந்திய இராணுவத்தை காட்டினுள் வராமல் தடுக்க வேவு வேலைகள் செய்வதற்கு நியமிக்கப்பட்டான்.

வேவு வேலையின் போது அவன் தனக்கு ஏற்படும் அனுபவங்களை வந்து கூறுவான். அதை இப்போது நினைத்துப் பார்க்கிறேன். கிழமைக்கணக்காக தனக்குத் தேவையான உணவு, உடைகளைச் சுமந்ததாலும், தொடர்ச்சியாகக் கோல்சரைக் கழற்றாததால் தோளில் ஏற்பட்டகாயத்தைக் காட்டிச் சிரித்ததை நினைக்கவா? சப்பாத்து வெட்டுகிறது என்று கூறி சப்பாத்தைத் தோளில் போட்டுக் கொண்டு வெறும் காலுடன் நடந்து வந்ததை நினைக்கவா? தூரஇடங்களிற்கு போகும்போது உனக்கு என்று தரும் பழரின்னையும், சீஸ் ரின்னையும் சாப்பிடாமல் வைத்திருந்து முகாமில் சக போராளிகளிற்குக் கொடுத்துச் சாப்பிடுவதை நினைக்கவா? முகாமில் பாய் இருக்கும்போது இரண்டு உரப் பைகளைச் சேர்த்துத் தைத்து அதை விரித்துப் படுத்திருப்பதை நினைக்கவா? ஏன்என்று கேட்டபோது பாயில் படுத்தால் நித்திரை வராது. சருகுகளிற்கு மேல் இதை விரித்து படுத்தால் மெத்தையில் படுப்பதுபோல் உணர்கிறேன் என்று கூறியதை நினைக்கவா? நெஞ்சம் கனக்கிறது.

இந்திய இராணுவம் பதித்த காலைத் திரும்பி எடுத்து ஓடியபின் யாழ்ப்பாணம் வந்து கொக்காவில், மாங்குளம் முதலிய சண்டைகளில் முன்னின்று திறமையாகப் போரிட்டான்.

அதன்பின் ஆனையிறவுச் சமரின்போது குறாப் பிரிக்கும் போது ஒட்டேகாவை எறிகணைப் பிரிவிற்கு பிரித்த போது, ''நான் முன்னணி சண்டைப் பிரிவிற்குப் போகப் போகிறேன்'' என்று கேட்டான். ஆனால் பொறுப்பாளர் ''எறிகணைப் பிரிவில் நில்'' என்று கூறினார். ஆனாலும் ஒட்டேகா அடம்பிடித்து முன்னணிச் சண்டைப் பிரிவிற்குச் சென்றான். ஆனையிறவு சமரில் திறமையாகச் செயற்பட்டான். அதன்போது வெற்றிலைக்கேணியில் நடந்த சண்டையில் தலையில் காயமடைந்தான்.

காயப்பட்டிருந்த காலப்பகுதியில் தானே, நீ நடந்து திரிந்த மணலாறு மீது போர் தொடுக்கப்பட்டது. இதைக் கேட்டவுடன் மணலாறு சமர்க் களத்திற்குச் செல்வதற்குக் கேட்டாயாமே. ஆனால் உன்னை அச் சமரிற்கு விடவில்லை. அதனால் நீ கவலையடைந்தாய். ஏனெனில் புனிதமான மணலாற்று மண்ணில் பலமாவீரர்களினதும், போராளிகளினதும் கால்கள் பதிந்த இடத்தில் எதிரியின் கால் பதிந்து அசுத்தமாவதை நீ விரும்பவில்லை,

அதன் பின் ஒட்டேகாவின் திறமைகளைக் கண்ட பொறுப்பாளர் அவனை எறிகணைப் பிரிவிற்குப் பொறுப்பாக நியமித்தார். எறிகணை செலுத்துவதில் திறமையாகச் செயற்பட்டதால் அவனைஎறிகணை பயிற்சி கொடுப்பதற்கு நியமித்தார்கள்

பயிறசி கொடுக்கும்போது பயிற்சி எடுக்கும் போராளிகளோடு சேர்ந்து அவனும் மண்மூட்டை தூக்கி ஓடுவான் பயிற்சியின்போது அவர்கள் செய்யும் எல்லாப் பயிற்சிகளையும் அவன் சேர்ந்துசெய்தான். பயிற்சிக் கஷ்டங்களை எல்லாம் அவர்களோடு சேர்ந்து அவனும் பகிர்வதால் சக போராளிகள் 'ஒட்டேகா அண்ணா, ஒட்டேகாஅண்ணா' என்று தங்கள் அன்பை அவனோடு பகிர்ந்தார்கள். ஒவ்வொரு நாள் காலையிலும் தனிமையில் இருந்து எறிகணைகள் பற்றிய புத்தகத்தைப் படித்து தனது அறிவை வளர்த்துக் கொண்டான். அப் புத்தகம் இப்போது இன்னொரு போராளியின் கையில் இருந்து எம்மோடு சேர்ந்து உன்னைத் தேடுகிறது.

பயிற்சிகள் கொடுப்பதில் முன்னின்றவனிற்கு, பல காலமாக சண்டைக்குப் போகவில்லை என மனம் புழுங்கியவனிற்கு கட்டைக்காட்டில் இராணுவம் வெளியேறி விட்டதாம். ஒட்டேகாவின் பிரிவினரையும் வெளிக்கிடட்டாம் என்றவுடன் மனமகிழ்ந்தான்.

சண்டையும் உக்கிரமாக நடந்தது. ஒட்டேகா ஆமி ஓடுறான் செல்லை அடி! இன்னொன்று அடி! என்ற பொறுப்பாளரின் சொல்லிற்கு இசைவாக செல்களை அடித்துக் கொண்டிருந்தவனிற்கு, எங்கிருந்தோ வந்த செல் அவனருகில் வீழ்ந்து வெடிக்கிறது. ஒட்டேகா என்ற போராளி மாவீரனாய்...

நாங்கள் உன்னை எங்கெல்லாமோ தேடுகிறோம். எங்களோடு சேர்ந்து, என் நிழல் தேடி வந்து களைப்பாறிய மக்களைஅழிக்கலாம். ஆனால் என்னை அழிக்க முடியாது என்று நிமிர்ந்து நிற்கும் மரங்களும், எனது வளங்களை எடுத்து வாழ்ந்த மக்களை அழிக்கலாம் என்னை அழிக்க முடியாது என்று துணிந்து நிற்கும் தென்னைகளும், என்மேல் தவழ்ந்து விளையாடிய மீனவரையும், வள்ளங்களையும் அழித்தாய். வெகு விரைவில் உன்னைப் பிடித்து விழுங்கி விடுவேன் என்று ஆர்ப்பரிக்கும் கடலும், எம்மை நீ அழித்தால் அடிக்கட்டைகளாக இருந்தாவது உனது கால்களில் குத்துவோம் என்று எதிரிக்கு எதிராகச் சவால் விடும் நெல் வயல்களும் சேர்ந்து உன்னைத் தேடுகின்றன.

ஒட்டேகாவின் திறமைகள் என்றும் அழியப் போவதில்லை. ஏனெனில் மணலாறு மண்ணோ, அன்றி ஆனையிறவு உப்பு வயலோ, இல்லையேல் மதவடி கடற்கரையோ, கோயில் வீதியோ அழியமாட்டாது. அவைகள் அவனது திறமைகளைக் காலம் காலமாக ஓங்கிக் கூவிக் கொண்டிருக்கும்.

எதிரி படைகளை ஓட்டமெடுக்கச் செய்த ஒட்டேகாவே!,

ஏன் எம்மை விட்டு விரைவாக ஓட்டமெடுத்தாய்,

எம் நெஞ்சை விட்டு உன் நினைவலைகள் ஓட்ட
மெடுக்கா

உன் கனவுகளை நனவாக்க நாமும்

தொடர்ந்து எதிரிகளைப் புறமுதுகிட்டு ஓட்டமெடுக்கச் செய்வோம்.

- அமுதசாகரன்

# விண்வெளி ஆராய்ச்சியில் சிதைந்த நகரம்

**உ**லகளாவிய ரீதியில் விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் முன்னைய சோவியத் ரஷ்ய விஞ்ஞானிகளிற்கு எதிரான ஓர் சர்ச்சையை ஆரம்பித்துள்ளனர். 1985 ஆம் ஆண்டு விண்வெளி ஆய்வின் போது விண்வெளியில் சிதைந்த நகரம் இருப்பதற்கான ஆதாரங்களைப் பெற்றிருந்தனர் ரஷ்ய விஞ்ஞானிகள்.

ஆதாரபூர்வமான தகவல்களையும் நிழற்படங்களையும் பெற்றிருந்த ரஷ்ய விஞ்ஞானிகள் ஆய்வு குறித்து எத்தகைய தகவல்களையும் வெளியிடாது மௌனமாக இருந்ததாக, ஐரோப்பிய விஞ்ஞான தகவல் பிரிவைச் சேர்ந்த டாக்டர்அல்பேர்ட் டீல்ஸ்டீன் தெரிவிக்கின்றார்.

மேலும், அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் கூட இத்தகைய தகவல்களை அறிந்திருந்தும் விண்வெளிக் கலம் ஐ. ஓ. குறித்து ஒருவிதமான தகவலையும் அறிவிக்கவில்லை என ஹங்கேரிய விண்வெளி ஆய்வு நிறுவனமும் தெரிவிக்கின்றது.

தனிமனிதனுக்கு மட்டும் உரிமையில்லை உலக மக்கள் இச்செய்தியால் அதிர்ச்சியடைவார்கள் என்றோ, அல்லது இத்தகவல்களைத் தெரிவிப்பதால் தமது கௌரவம் பாதிக்கப்படுமென்றோ கருதியதால்தான் இவர்கள் மௌனம் சாதித்து விட்டனர். ஆனால், விண்வெளியின் ஆய்வு தனியொரு மனிதனுக்குரீயதொரு விடயமாக இல்லை என்பதையும் ஏனோ அறியத் தவறி விட்டனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

சோவியத் விண்வெளியுக ஆய்வுகள் 1985ஆம் ஆண்டு ஆடி மாதம் 19ஆம் திகதி ஐ. ஓ. எனும் கலம் மூலம் செயற்படுத்தப்பட்டது. விண்வெளியில் சிதைந்த நகரம் நிழற்படங்களில் காணப்பட்ட பொழுதிலும் அந்த நகரம் நவீன நாகரீக யுகத்திற்கு பொருத்தமானவையாகவே காணப்பட்டன.

கம்பியூட்டர்தொடர் நிலையங்கள், தொலைத்தொடர்பு, வானொலித்தொடர்பு, போக்குவரத்துப் பாதைகள், மாட மாளிகைகள் என்பனவும் தெளிவாக, முக்கோண வடிவமைப்பில் அமைந்துள்ளதைக் காணக்கூடியதாக இருந்தது.

பூமியில் காணப்பட்ட சிதைந்த நகரக் கட்டடங்களைப் போன்றே இவை தோற்றம் அளிக்கின்றன. குறிப்பாக 'எதென்ஸ்' நகரில் காணப்பட்டகிரேக்க நாகரீக சின்னங்களைச்சார்ந்தவையாகவும் இவை இருக்கலாம் எனகருதப்படுகிறது.

1983 ஆம் ஆண்டு இன்னுமொரு சோவியத் விண்வெளிக் கலம் இத்தகைய நிழற்படங்களைப் பெற்றிருந்ததாகவும் சந்தேகம் கிளம்பியுள்ளது. ஏறத்தாள இக் கட்டட அமைப்புகள் 50,000 வருடங்களுக்கு முற்பட்டன எனவும் தெரிவிக்கப்படுகின்றன,

'கிறீம்லீன்' சோவியத் விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் இந்த சர்சைக்குரிய விடயத்தை மறுக்கலாம் அல்லது உண்மையென ஆதாரபூர்வமாக நிரூபிக்கலாம் எனவும் டாக்டர் டீல்ஸ்டீன் தெரிவிக்கின்றார்.

அமெரிக்க விஞ்ஞானிகளும் ரஷ்ய விஞ்ஞானிகளுக்கு சமமான அறிவைப் பெற்றிருக்கின்றனர், ஆய்விற்குரிய தகவல்களைப் பரிமாறிக் கொள்வதன் மூலமே மேலதிக சகல நன்மைகளைப் பெறலாம் என்பதைஏனோ சிந்திக்கத் தவறி விட்டனர்?

விண்வெளியில் மனிதன் காலடி வைத்து கால்நூற்றாண்டு காலத்தைஅண்மித்து விட்ட பொழுதிலும் இன்றும்

[6ஆம் பக்கம் பார்க்க]

சிறுகதை

# சாம்பல்மேடு

'தாமரைச் செல்வி'

அன்று மாலை வானொலியில் மாலை ஆறு மணிச் செய்தி ஒலிபரப்பானதை அடுத்து கிராமமே அல்லோல கல்லோலப்பட்டுக் கொண்டிருந்தது.

கூட்டம் கூட்டமாய் சனம் ஒழுங்கைகளில் நின்று செய்தியில் சொன்னதைப் பற்றியே கதைத்துக்கொண்டு நின்றது.

முருகையனுக்கு வானொலிச் செய்தி பற்றி எதுவுமே தெரியவில்லை. அந்த சிறிய குடிசையின் ஒருபக்கம் அடுப்பு எரிய தோசைக் கல் வைத்து ரொட்டி சுட்டுக்கொண்டிருந்தான்.

மழையில் நனைந்த ஈரவிறகுகள் எரிய மறுத்தது. ஒழுக்கு சிந்தி நிலம் ஈரமாய் இருந்தது. நடுமுகட்டு மரத்தில் கட்டப்பட்ட ஏணைக்குள் ஒரு வயது ராசு சிணுங்க பன்னிரண்டு வயது மூத்த மகள் மஞ்சு ஏணையை ஆட்டிக் கொண்டிருந்தாள். மற்ற இரண்டு பிள்ளைகளும் அவன் சுடுகின்ற ரொட்டிக்காக அவனையும் அடுப்பையும் மாறிமாறிப்பார்த்துக்கொண்டிருந்தன.

பகல் முழுக்க வேலுப்பிள்ளை வீட்டில் விறகு கொத்திவிட்டு வந்த அலுப்பை ஒருபக்கம் ஒதுக்கி விட்டு முருகையன் ரொட்டியை சுட்டு பிள்ளைகளுக்கு பகிர்ந்து கொடுத்தான்.

குழந்தைக்கு டின்னுக்குள் கடைசியாக இருந்த மாவைக் கொட்டி சுடுதண்ணியில் கரைத்து போச்சியில் விட்டுக் கொண்டு குழந்தையை ஏணைக்குள்ளிலிருந்து தூக்கினான்.

அப்படியே நிலத்தில் அமர்ந்து மடியில் குழந்தையை கிடத்தி பாலைப்பருக்கினான். ஒரு நிமிடம் தன் பிள்ளைகளைப் பார்த்துக் கொண்டிருந்தவனுக்கு கண்கள் கலங்கின.

கண்மணியின் நினைவுவந்து நெஞ்சை அடைததுக் கொண்டது. ஆறுமாதத்துக்கு முதல் கிளிநொச்சிசந்தைக்குப்போனவள் விமானம் குண்டு போட்டதில் அட்டபடியே சிறறிப் போயிருந்தாள். சற்றுத்தூரத்தில், பாதி கருகிய மரக்கிளையில் அவளது மஞ்சள் சேலையின் ஒரு பகுதி புகைபிடித்த நிலையில் கிடந்ததைப் பார்த்ததும் அழக்கூட அவனுக்கு சக்தி இருக்கவில்லை. இன்றைக்கும் அவன் சந்தைப்பக்கம் போவதே இல்லை. அந்த அதிர்ச்சி அவனுக்கு இன்னமும் மாறவில்லை.

அவள் இருக்கும்வரை இந்தக் குடும்பத்தையும் குழந்தைகளையும் என்ன அழகாய்ப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

இப்போது மனைவியின் இழப்புக்குக்கூட ஆற அமர இருந்து அழமுடியாமல் குழந்தைகளின் சுமை அவனை அழுத்திக் கொண்டது. அவன் பகலில் கூலி வேலைகளுக்கு போகும் நேரங்களில் மஞ்சு மற்றக் குழந்தைகளைப்பார்த்துக்கொள்வாள். அவன் இரவில் வந்து சாப்பாடு ஏதும் செய்து அவர்களுக்கும் கொடுத்து தானும் சாப்பிட்டு விட்டு ராசுவை அணைத்துப் படுத்துக் கொள்கையில் துக்கம் தொண்டைக்குள் அடைக்கும்.

இந்தக் குழந்தைகளை எப்படி வளர்த்து ஆளாக்கப் போகிறேன் என்று திகைப்பாய் இருக்கும்.

தானும் தன் குழந்தைகளுமாய் இருப்பவனுக்கு வானொலிச் செய்தி கேட்டிருக்க நியாயமில்லை.

ராசுவைக் கிடத்திவிட்டு ரொட்டியை தன் வாயில் வைக்கும்போதுதான் பக்கத்து வீட்டு கனகம் ஆச்சி அவசரமாய் ஓடி வந்தாள்.

''தம்பி... செய்தி கேட்டனியேடா ''

அவனுக்கும் அந்தக் குழந்தைகளுக்கும் அந்த ஆச்சியின் குடும்பம் தான் உதவியாக இருக்கிறது.

ஆச்சியின் பதற்றம் முருகையனுக்கு வியப்பைத்தர ''என்ன செய்தி''என்று கேட்டான்.

''ஆனையிறவுக்கு இந்தப் பக்கம் இருக்கிற சனங்களை எல்லாம் எழும்பட்டாம் பரந்தனிலயிருந்து தருமபுரம்வரை ரோட்டில இருக்கிற சனங்களை எழும்பித் தூரப்போகட்டாம் பரந்தன் எண்டால் எங்களுக்கும் பயம்தானே ''இந்தச் செய்தியால் திகைத்துப் போன முருகயன்

''நாங்கள் இந்த குளிர்நேரம் எங்க ஆச்சி போறது இதென்ன ஆக்கினை...'' என்றான் கவலையுடன்.

பரந்தனுக்கு பிரதான வீதியிலிருந்தே மேற்குப் பக்கமாய் 200 யார் வரை பரந்திருந்த சிறிய கிராமம் அது.

''எங்கயாவது போவம். அறுப்பாங்கள் விடிய வந்து குண்டு போடப்போறாங்கள்.''

ஆச்சியின் மெலிந்த உடல் நடுங்குவது கைவிளக்குவெளிச்சத்தில் தெரிந்தது.

''இப்ப இருட்டுக்க போக ஏலுமே ஆச்சி. நாளைக்கு காலமை பார்த்துப்போவமே.. எண்பத்தி மூண்டாம் ஆண்டு பரந்தன் சந்தியில விழுந்த வெடிச்சத்தத்தோட ஓடத் தொடங்கினனாங்கள் இன்னும் ஓடிமுடியேலை..'' என்றான் சலிப்போடு.

''அதுக்கு என்ன செய்யிறது மோனை... உந்த ஆனையிறவில அவங்கள் இருக்கிற வரைக்கும் நிம்மதியாய் இங்கஇருக்கேலாது. எங்க ஊருக்குத்தான் நெடுகவும் பிரச்சினை வாறது. ஏதோகொஞ்சம் தூரம் எட்டிப் போய் நிண்டிட்டு பார்த்து பிறகு வரலாம். நீ வெளிக்கிடு...''

அப்போதும் அவன் சிறிது தயங்க

''ஒண்டும் யோசிக்காத ஐஞ்சாம் வாய்க்காலில் கோபாலன் வீட்டில போய் இருந்திட்டு பிறகு வருவம் வெளிக்கிடு'' என்று ஆச்சி சொல்லிவிட்டு தன் வீட்டுக்கு ஓடினாள். பெரிசு இரண்டும் பயத்துடன் ''ஆச்சி என்னப்பா சொன்னவ. ஆமிக்காரன்வரப் போறனாமா '' என்று கேட்க ''சீச்சி... எதுக்கும் எட்ட நிண்டிட்டு வருவம் வாங்கோ'' என்று சமாதானமாய்ச் சொன்னான்.

ஒரு பசளைப் பையில் பிள்ளைகளின் உடுப்புக்களை எடுத்து அடைந்துவிட்டு சிறு பையில் குழந்தையின் போச்சியும் சீனிப்போத்தல், இரண்டு கோப்பை எடுத்து வைத்துமஞ்சுவுக்கு அடுத்த செல்வத்தின் தலையில் வைத்து தூக்கி வரச்சொல்லி விட்டு பழைய போர்வையால் குழந்தையைச் சுற்றி தோளில் போட்டு மறுகையால் நாலு வயதுப் பாலனையும் பிடித்துக் கொண்டு குடிசையைப் பூட்டிக்கொண்டு வெளியே வந்தான்.

ஒழுங்கையில் கூட்டம் கூட்டமாய் சனம் நடந்து போய்க் கொண்டிருந்தது.

ஆச்சி வீட்டாக்களுடன் அவர்களும் நடந்தார்கள். இதென்ன சீவியம் என்று மனதுக்குள் வெறுத்துப் போனது. இப்படி எத்தனை தடவைகள் ..

ஒழுங்கையால் நடந்து பூநகரி வீதியில் ஏறியபோது இன்னமும் சனம் கூட்டமாய் சைக்கிள்களிலும் நடந்தும் போனார்கள். மெல்லிய மழைத்தூறலில் காற்று குளிராக அடித்தது.

ஐந்தாம் வாய்க்கால் சந்தி கடந்து வயல் ஓரமாய் இருந்த குடிசைக்கு அவர்கள் போய்ச் சேர்ந்த போது பன்னிரண்டு மணியாகிவிட்டது. குடிசை விறாந்தையில் கோபாலன் கொடுத்த பழைய பாயில் குழந்தைகளை படுக்க வைத்து விட்டு அவன் பக்கத்தில் அமர்ந்து கொண்டான். ஆச்சி வீட்டாரும் வேறு சிலரும் முன்பக்கமிருந்த வேப்பமரத்தின் அடியிலும் குடிசைத் தாழ்வாரங்களிலும சாக்குகளை போட்டுக் கொண்டு இருந்தார்கள்.

''ஏதோ நடக்கப் போகுது. அதுதான் ஆட்களை எழும்பச் சொன்னவங்கள்.''

''இல்லை ஆமிவரப் போகுது போல ..''

''சீ சும்மாவெருட்டுறாங்கள் இருந்து பார் ஒண்டும் நடக்காது.''ஆளுக்காள் கதைத்துக் கொண்டிருந்தார்கள். அந்தப் பேச்சுக்களில் அவனின் மனம் ஈடுபடவில்லை. இப்படியான அவல நேரங்களில் கண்மணியின் நினைவு வந்து விடுகிறது. அடையாளம் காண்பதற்குக் கூட உடல் இல்லாத கொடுமையை நினைக்க நெஞ்சே வெடித்து விடுகிறது. மரத்தில் தொங்கிய புகைபடிந்த மஞ்சள் சீலை இப்போதும் கண்ணில் நிற்கிறது. சாகும் வரை மறக்க இயலாத அவலம் அது

இரண்டு மணிக்கு மரத்தின் அடியில்சாக்குகளில்ஒவ்வொருவரும் சுருண்டு கொண்டார்கள். சிணுங்கி அழும் ராசுவை மடியில் வைத்து ஆட்டிக் கொண்டே விடியும் வரைவிழித்திருந்தான்.

மறுநாள் விடிந்து அமைதியாய் நேரம் நகர்ந்தது. கோபாலன் பாண் வாங்கி தேனீர் வைத்து எல்லேருக்கும் கொடுத்தான். மத்தியானம் பெரிய பானையில் கஞ்சியை வைத்து விட்டு ஆச்சியின் பேரன் கணேசு உப்பு வாங்க சந்திக்கடைக்கு ஓடினான். ''பக்கத்தில் இருக்கிற ஆனையிறவில எவ்வளவு உப்புக் கிடக்கு. அநியாயப்படுவாரால எடுக்க வழியில்லாமல் நாங்கள் ஒரு கல்லு உப்புக்கு அல்லாடவேண்டிககிடக்கு .''

ஆச்சி எரிச்சலுடன் சொன்னாள்.

அன்றைய பொழுது எந்தப் பிரச்சினையுமில்லாமல் போனதில் மனம் கொஞ்சம் ஆறுதல் பட்டுக் கொண்டது. அடுத்த இரண்டு நாளும்அமைதியாய் போனதில் ஒவ்வொருவராய் எல்லோரும் கிராமத்துக்கு திரும்பினார்கள்.

முருகையன் தன் குழந்தைகளுடன் குடிசைக்கு வந்த பிறகும் நாலு நாட்களாக வெளியே எங்கும் போகவில்லை. பிள்ளைகளை விட்டுவிட்டு போவதற்கு பயமாக இருந்தது. பொம்பர் ஏதும் வந்தால் பிள்ளைகள் பயந்து போவார்களே என்று கவலையாய் இருந்தது.

எத்தனை நாட்கள் தான் உழைப்பில்லாமல்இருக்க முடியும். அன்று வெள்ளிககிழமை விடிய ஆறு மணிக்கு எழும்பி விட்டான்.

சுருண்டு படுத்திருந்த செல்வத்தை உலுப்பி எழுப்பினான்

''வேலுப்பிள்ளை அண்ணையிட்ட இண்டைக்குவேலைக்கு வாறதா எண்டு கேட்டுவாடா ''

செல்வம் கண்ணைக் கசக்கிக் கொண்டு ஒழுங்கையால் வேகமாய் நடந்து போனான்.

முருகையன் அடுப்பைமூட்டி கேற்றிலைத் தூக்கி வைத்த போது 'சர்' என்ற பெரும் இரைச்சல் கேட்டது.

முற்றத்தில் நின்ற மஞ்சு

''அப்போய்! மூண்டு பொம்பர் வருகுது''என்றுகத்தினாள்

''இல்லை நாலு ''

அவன் பதைபதைத்து ஓடி வந்து முற்றத்தில் நின்றுபார்த்தான்.

மூன்று பொம்பர்களும் ஒரு அவ்ரோவும் சீரான வேகத்தில் வந்து கொண்டிருந்தன.

''பயப்படாதேங்கோ அவங்கள் நேராய்ப் போயிடுவாங்கள்...'' அவன் சொல்லி வாய் மூடவில்லை.. ஒரு வினாடியில் அவைவளைந்துதிரும்பின.

முதல் குண்டு காதைஅடைக்கும் சத்தத்துடன் சிறிதுதூரத்தில் விழுந்து வெடித்தது.

ஐயோ என்ற அலறலுடன் அவர்கள் ஒரு தடவை விழுந்து எழுந்தார்கள்.

பள்ளிக்கூடப் பக்கமாக பெரும் புகை தெரிந்தது.

''எங்கட பரந்தன் பள்ளிக்கூடத்துக்குத்தான் குண்டு போட்டிட்டாங்கள் மற்றதும் குத்துது...''

ஆச்சியின் குரல் ஒலித்து மறைய அடுத்தகுண்டு வெடித்தது பொம்பர்கள் மறுபடி வளைந்து வந்தது.

''ஐயோடா மோனை எங்கையும் எட்டிப் போவம் !''

''மஞ்சு ஏணைக்க தம்பி கிடக்கு ஆட்டு பிள்ளை ...''

என்று மஞ்சுவிடம் சொல்லிவிட்டு ஆச்சியிடம் திரும்பினான்.

''செல்வத்தை வேலுப்பிள்ளையண்ணைவீட்டஅனுப்பிப் போட்டன் ஆச்சி இப்ப என்ன செய்ய ..''

அவன் பரபரத்தான்.

''நீ ராசுவைத் தூக்கிக் கொண்டுஓடிப்போய் செல்வத்தைக் கூட்டிவா. நான் மற்றதுகள் ரெண்டையும் கூட்டிக் கொண்டு போறன்.''

என்று ஆச்சி தன் வீட்டுக்கு ஓடினாள்.

செல்வத்தைக் கூட்டி வரப் போகும் போது குழந்தையையும் தூக்கிப் போவது ஆபத்து என்பதால்

''மஞ்சு நீ ராசுவைத்தூக்கிக் கொண்டு பாலனோட ஆச்சியாக்களோட போ. நான் செல்வத்தை கூட்டி வாறன்.'' என்று சொல்லிவிட்டு அவன் ஒழுங்கையில் ஓடினான்.

இரண்டாவது ஒழுங்கை வரை வர விமானம பதிந்து அடுத்த குண்டைப்போட்டது.

கண்ணெதிரே புகை மண்டலம்.

கடவுளே ....

விழுந்து எழுந்து திரும்பவும் ஓடினான்.

சனங்கள் குழந்தை குஞ்சுகள் பயத்தில் அழ அழ ஓடிக் கொண்டிருந்தார்கள்.

''எங்கையாம் குண்டு விழுந்தது?''

''ஆருக்குத் தெரியும் ஸ்கூலுக்குப் பிறததாலையும் தண்டவாளக் கரையளிலயும் விழுந்தது. கிறவுண்ஸ் பக்கம் ஷெல்லும் அடிககிறாாகள்.''

விமானங்களின் இரைசசலுடன் ஷெல் வந்து விழுந்து வெடிக்கும் சத்தமும்கேட்டது.

அவன் கிழ்ப் பாலத்தருகே வர எதிரே செல்வம் அழுது கொண்டே ஓடி வந்து கொண்டிருந்தான்

அபபா அப்போய்

தகப்பனைக் கண்டதும் கதறலாய் மாற கட்டிப் பிடித்துக் கொண்டான். ''பயப்படாத குஞ்சு. அப்பா வந்திட்டன் தானே வா போவம்..''

குண்டுபோடும் போது விழுந்து படுத்துக் கொண்டும் பிறகு எழுந்து ஓடியும் கோவிலடி வரை வந்தார்கள்.

அங்கே நின்றவர்களும் பதற்றத்துடன் இன்னும் பின் பக்கமாய் வேகமாய்ஓடினார்கள். அவன் செல்வத்தின் கையைப் பிடித்துக் கொண்டே பின் வயலில்ஓடி முள்ளும்பத்தையுமாய் கிடந்த வாய்க்கால் கரையாய் ஓடி ஐந்தாம் வாய்க்கால் பகுதியில் பூநகரி ரோட்டில் ஏறினார்கள், கூட வந்த குழந்தைகளின் அழுகுரல் தாங்க முடியாத கவலையைத் தந்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## தாயகம் நோக்கி......

அவர்கள் தயாராக நிற்கின்றனர்
மூட்டை முடிச்சுக்களுடனும்,
முடமான கனவுகளுடனும்

'இந்தியன் ஏர்லைன்'சும்
இரண்டொரு கப்பல்களும் கூட
தயாராகவே நிற்கின்றன
நம்மூர் மாநகரசபை
குப்பை வண்டிகளாய்!

பார்வைகள்
அருவருப்பாய் மொய்க்க
புழுக்களாய் நெளியும் மனங்கள்!

"அப்பாடா......
இன்னும் கொஞ்ச நாளில்
துப்புரவாகிவிடும்"-
நிம்மதிப் பெருமூச்சுடன்
இந்திய அரசு!

குருவிச்சை வாழ்வின்
வேர்கள் அறுந்தன.

இங்கே - தாயகத்தில்
குண்டு மழையினூடே
மானத்தின் வாழ்வு
நிலைத்துள்ளது.

எரிந்த தமிழனின் சாம்பலும்,
சிதைந்த உடல்களும், குருதியும்
'எங்கள் மண்' என்பதால்
கௌரவமாகவே கலந்துவிட்டன

குற்ற மனங்களுடனும்
கூசும் பாதங்களுடனும்
தாயகத்தின் திசைநோக்கி
அவர்கள் தயாராக நிற்கின்றனர்
'இந்தியன் ஏர்லைன்'சும்
இரண்டொரு கப்பல்களும் கூட!

- விவேக்

# மாயை கௌவிய கருத்துலகம்: எங்களுக்காக நாங்களே சிந்திக்க வேண்டும்

மு. திருநாவுக்கரசு

மனித குலத்தின் மீது ஆதிக்கம் செலுத்துவதற்குரிய முக்கிய ஆயுதமாக தொடர்புச் சாதனங்கள் காணப்படுகின்றன. தொடர்புச் சாதனங்கள் மீது தமது பிடியை வைத்திருப்போர் மனிதகுலத்தின் மீது தமது பிடியை வைத்திருப்பது இலகுவானதாய் உள்ளது. கைத்தொழிற் புரட்சி இரண்டாம் கைத்தொழிற் புரட்சி, (கணணி, இயந்திர மனிதன்) தொடர்பு சாதனப்புரட்சிஎன இயந்திரமயம் சம்பந்தப்பட்ட முக்கிய புரட்சிகள் எல்லாம் மேற்குலகிலேயே தொடர்ந்து ஏற்பட்டு வருகின்றன. தொடர்பு சாதனங்களில் ஏற்பட்டுள்ள புரட்சியால் மேற்குலகம் தனது எண்ணங்களையும் விருப்புங்களையும் பரந்த உலகின் மீது திணித்து தனது அபிலாசைகளை இலகுவாக ஈட்டிக் கொள்கின்றது.

தொடர்பு சாதனங்கள் மூலம் ஒரு பெரும் கலாசாரச் சுரண்டலை மூன்றாம் உலக நாடுகள் மீது மேற்குலகம் நடத்துகின்றது. கலாசாரச் சுரண்டலில் சிந்தனை என்பது ஒரு தலையாய அம்சம். இயல்பானதும், இருக்க வேண்டியதும், பொருத்தமானதுமான சிந்தனைகளுக்குப் பதிலாக ஒரு மாயாசிந்தனையை வெகுஜன தொடர்பு சாதனங்களின் மூலம் இவர்கள் உருவாக்கி விடுகிறார்கள். செய்மதியின் வருகை இன்று தொலைத் தொடர்பில் பெரும் பாச்சலை ஏற்படுத்தியுள்ளது. சகலவெகுஜன தொடர்புச் சாதனங்களுக்கும் இன்று அது மையமாகி விட்டது. செய்தி-தகவல் சேகரிப்பு, செய்தி-தகவல் பரவல், செய்தி-தகவல் கட்டுப்படுத்தல், செய்தி-தகவல் திரிப்பு ஆகிய அனைத்தும் இன்று தொடர்பு, வெகுஜன தொடர்புச் சாதனங்கள் மூலம் மேற்குலகின் கைகளில் உள்ளன.

திரைப்படம், தொலைக் காட்சிப்படம் மற்றும் கலை இலக்கியம், பண்ட விளம்பரம், செய்திகள், தகவல்கள், ஆய்வு நூல்கள், ஆய்வுக்கான மூலாதாரங்கள் போன்ற சகல அம்சங்களுக்கு ஊடாகவும் மேலைத்தேச நோக்கு நிலையிலான ஒரு மேலைத்தேசக்கருத்துப்படிமம் எம்மை அறியாமலே எம்மிடம் உருவாக்கப் பட்டுவிடுகின்றது. இவற்றால் சிந்தனை, கலாசாரம், சமூக - அரசியற்போக்கு என்பன நிர்ணயிக்கப்பட்டுவிடுகின்றன. ஒரு வகையில் இவைகள் அபினிகள் ஆகும். இச்சாதனங்கள் மூன்றாம் உலக மக்களை தன்னுணர்வின்றிச் செயற்பட வைக்கின்றன.

"ஓர் அடிமை தான் அடிமையாய் இருக்கிறேன் என்பதை உணர்ந்து விட்டானென்றால் அவன் அரைவாசிச் சுதந்திரம் அடைந்து விடுகிறான்'' என்றொரு கூற்றுண்டு. இவ்வாறு மேலைத்தேச தொடர்புச் சாதனங்களினால் தாம் காயடிக்கப்படுகிறோம் என்பதை மூன்றாம் உலக மக்கள் உணர்ந்துகொள்வார்களேயானால் அரைவாசிப் பிடி தளர்ந்ததற்குச் சமன்.

இவற்றின்அர்த்தம்மேலைத் தேசத்தின் விஞ்ஞானத் தொழில் நுட்ப சாதனைகளை நிராகரிக்க வேண்டும் என்பதில்லை. மேலைத் தேசத்தின் செருப்புக்கேற்ற காலாய் மூன்றாம் உலகம் வெட்டப் படக்கூடாது. மாறாகக் காலுக்கேற்ற செருப்பாய் ஒரு சுய தெரிவு எல்லாவற்றிலும் இருக்க வேண்டும். இவற்றிற்கான ஆப்பு சிந்தனைத் துறையில் இருந்தே உருவாக வேண்டும்.

''கற்பனை நிறைந்த காவிய இரசனைமிக்க மக்கள்'' ஒன்று இந்திய உபகண்ட சமூகத்தைப் பற்றி 19 ஆம் நூற்றாண்டின் முக்காற் பகுதியில் ஒரு சிந்தனையாளன் கூறினார். தென்னாசிய மக்களின் பொதுவான சிந்தனைப்போக்கில் மாயையும் கற்பனையும் அதிகம் கோலோச்சுவதுண்டு. ஆனால் தென்னாசியப் பிராந்தியத்தில் வாழும் சிறிய மக்கள் கூட்டமான தமிழீழ மக்கள் கடந்த ஒரு தசாப்தத்தில் பல்முனைத் தாக்குதல்களுக்கும், பல்வகை அனுபவங்களுக்கும் உட்பட்டவர்கள் என்ற வகையில் இப்பிராந்தியத்தில் உள்ள ஏனைய மக்கள் கூட்டத்தவரையும் விட அதிக விழிப்புணர்வு கொண்டவர்களாய் உள்ளனர். பட்ட அனுபவமே இதற்கான பிரதான காரணம். இது அரசியற் துறைக்கே பிரதானமாகப் பொருந்தும்.

தென்னாசியாவின் பொதுவான சிந்தனைப் போக்கில் கற்பனையும், மாயையும், அதீதப் போக்கும் அதிகம் வேரூன்றி உள்ளது. மேலைத் தேசத்தவர்களினால் இம்மக்கள் மீது மூடிப் போர்க்கப்பட்டுள்ள சிந்தனை மாயையும், இம்மக்களிடமே காணப்படுகின்ற கற்பனைப் போக்கும் மற்றும் பல்வழிகளினாலும் உருவாகும் அதீதப் போக்கும் உடைக்கப்படுவதே இப்பிராந்திய மக்களின் விமோசனத்திற்கான அடிப்படை நிபந்தனைகளாகும்.

மூன்றாம் உலக நாடுகளின் பிரச்சினைகளை மையமாகக் கொண்டு அவர்களின் நோக்கு நிலையிலான ஆய்வுகள் சிறப்பான வளர்ச்சியை அடைய வேண்டும்இருக்கும்பிழையான கருத்துப்படிமம் உடையவேண்டும் சிந்தனையில்உயிர்த்துடிப்பும், செயல்பூர்வமான வழி காட்டலும் இருக்க வேண்டும். ஆய்வு என்பது மனவிருப்பத்தை கருத்தாக்குவதல்ல; அப்படியாயின் அது ஒரு கற்பனை தான். காணப்படும் யதார்த்தத்தை உள்ளபடியே கண்டறிவதும், அந்த யதார்த்தத்தை வைத்துக் கொண்டு உருவாக்கக்கூடிய நல்லவை எவை என அடையாளம் காண்பதும், அந்த நல்லவற்றை உருவாக்க யதார்த்தத்தில் எவ்வளவு தூரம் இடமுண்டு என்பதைக் கண்டறிவதுமே ஆய்வாகும். அதாவது இயற்கையைப்பற்றியதும், இயற்கையின் நியதியைப்பற்றியதுமேஆய்வாகும். மனத்தின் கற்பனா விருப்பு வெறுப்புக்கு அப்பால் காணப்படும் உண்மையான நியதியை மக்களின் நன்மைக்காக எவ்வளவு தூரம் பயன்படுத்தலாம் என்பதை கண்டறிந்து விளக்கும் ஒருவன்தான் அமரத்துவமுள்ள சிந்தனையாளனாய் நிலைப்பான்.

ஒருபுறம் மனிதனது நடத்தையிலும், தேவையிலும், வாழ்விலும் சமூகத்தன்மை இடையறாது அதிகரித்துக் கொண்டு செல்கின்றது. மறுபுறம் ஆய்வில்சிறப்புத்தேர்ச்சி என்பதன் பெயரில் தனித்தன்மை அதிகரித்துக்கொண்டு செல்கின்றது. அதாவது பகுப்பாய்வுகள் அதிகரிக்கின்றன; ஆனால் தொகுப்பாய்வுகள் அருகுகின்றன. இது பண்ட உற்பத்திவளர்ச்சியின் தவிர்க்கமுடியாத விளைவு என்றொரு கருத்துண்டு. ஒரு தொகுப்பான சிந்தனைதான் ஒரு முழு வடிவத் தாக்கத்தையோ அல்லது கருத்தையோ தரவல்லது, அல்லாத இடத்து அது யானை பார்த்த குருடர்கள் கதைதான்.

மூன்றாம் உலக நாடுகளின் சிந்தனையிலும், கருத்துலகிலும் புரட்சிகரமான மாற்றங்கள் ஏற்படவேண்டும். ஒரு காலத்தில் கற்பனையின் மத்தியிலும் பெரும் சிந்தனையாளர்களைப் படைத்தது ஆசிய மண். எனவே அதனால் முடியாததென்றில்லை. ஆனால் அதன் சிந்தனைத் திறன் தற்பேது மேலைத் தேசத்தால் கெடுக்கப்பட்டுள்ளது. ஆசிய ஞானிகள் ஒருபுறம் கற்பனைதன்மையுள்ளவர்களாயும், மறுபுறம் இயற்கை விதிகளை ஆராய்ந்தவர்களாயும் காணப்படுகிறார்கள். எமது இன்றைய தேவை கற்பனைகளை கைவிட்டு மேலைத் தேசத்தின் கருத்தாக்கிரமிப்புக்கும், திரிபுகளுக்கும் ஆட்படாது எத்தகைய இடர்களையும் தாண்டி எமக்குப் பொருத்தமான கருத்துக்களையும், எண்ண ஓட்டங்களையும் உருவாக்கவேண்டும் என்பதுதான்.

# "தமிழ்க் கவிதை மரபிலிருந்து விடுதலை உணர்வை இனங்காணவேண்டும்"

தில்லைச்சிவன்



நாம் நமது கலாசாரத்தினுள்ளேயே வாழும் மக்களைக் கவனிக்கத் தவறிவிடுகிறோம். சமுதாயத்தின் தேவைகளை உணர்த்தாதவையும், மானுட உள்ளத்தை விளக்காதவையும் நல்ல கவிதைகள் அல்ல. அழகுணர்ச்சியை மட்டும் வெளிப்படுத்தும், படித்தவர்கள் மாத்திரம் பேசிப் பாடி அனுபவிக்கின்ற, தன்மை கொண்ட அந்தாதி, யமகம், திரிபு, சித்திரக் கவி ஆகியன மக்களுக்கு விளங்காத படைப்புகளாக இருந்தன. மகாகவி பாரதிக்குப் பிறகு, மக்கள் தேவயை உணர்ந்து, அவர்களை வழி நடத்துகின்ற கவிதைகள்பிறந்தன. கொத்தமங்கலம் சுப்பு, காட்டூர் கண்ணன் மற்றும் சில்லையூர்செல்வராசனின்கவிதைகள் அங்கதச் சுவை மிக்கதாதி, சமூக அநீதிகளை நாசுக்காகச் சாடி மக்களை வழிப்படுத்திக் கவர்ந்தன. இதே பாணியில் 1950 களில் சுதந்திரன் ஏட்டில் நான் பல கவிதைகள் எழுதியுள்ளேரன். கோட்டை முனியப்பரே கூட வந்து கேளுமையா என்று அப்போது தான் பாடிய பாடல் தமிழ் அரசியல் மேடைகளில் மேற்கோள் காட்டப்பட்டன என்கிறார் கவிஞர் தில்லைச் சிவன்.

தில்லைச்சிவன் சற்று யோசித்தார். பிறகு, தமிழ்க கவிஞரில் பெருமையைச் சொல்லிக் கொள்ள இன்று வரை நிறைய இருக்கின்றன. அன்று தொடங்கி இன்று வரை கவிஞர்களும் சமூக மாற்றத்துக் கானகாரணஸ்தர்களாக இருந்திருக்கிறார்கள். சங்க காலப் படையெடுப்புக்களில் பாணரும், விறலியரும் அரசனுடன் கூடச் சென்றிருக்கிறார்கள். போரைப் பற்றிப் பாடுவதும், அரசரின் வீரத்தைப் பாடுவதும் இவர்களுக்கு இயல்பாகவே பிடிக்கும். சுதந்திரப் போராட்ட காலத்தில் பாரதியார் போராட்டத்தோடு தன்னை அடையாளம் கண்டு தமிழ்க்கவிதைக்குஅர்த்தங்கள் சார்ந்தும், அழகுகள் சார்ந்தும் புதிய பரிமாணங்களை ஏற்றியவர். இதே போல் தமிழரின் போராட்டம் மிக நெருக்கடியான கட்டத்தைச் சந்தித்துக் கொண்டிருக்கிற இவ் வேளையில் கவிஞர் காசி ஆனந்தன், புதுவை இரத்தினதுரை ஆகியோர் தமது இலக்கிய காவியங்களில் வலுவான நிலைப்பாட்டையும், தமிழ் உணர்வையும் வெளிப்படுத்துகிறார்கள். இந்த மாதிரி இன்றுபல இளங் கவிஞர்களும் சமகால நிகழ்வுகளால் பாதிக்கப்பட்டு தமது பார்வையில் பட்டதை எடுத்துச் சொல்கிறார்கள், என்றார்.

## விடுதலை உணர்வு

ஈழத்துக் கவிதைகள்பற்றிப் பேசுவதானால் நாம்தில்லைச் சிவனின் பங்களிப்பைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. நமதுகவிதைகள் மண்வாசனையற்ற அன்னியத் தன்மையிலிருந்து விடுபடவேண்டும் என்ற தேடலைக் கவிஞர் தில்லைச்சிவன் ஐம்பதுகளிலேயே தொடங்கிவிட்டார் என்று சொல்லலாம் சமூக அநீதிகளுக்கு எதிர்ப்பையும், விடுதலை உணர்வையும் ஈழத்துக் கவிதை மரபில் நாம் தேடத் தொடங்கினால் நம் பார்வையில் தில்லைச்சிவனின் பாடல்களும் படுகின்றன. அற்புதஞ் செய் என்ற பாடலில்,

''முரசு அதிர்ந்தது செந்தமிழர் புலிக் கூட்டம் விரையுது போணிக்கே'' என்றும், அதே பாடலில் பெண்களும் போராட்டத்தில் கலந்து கொள்ளவேண்டும் என்ற தொனியில்,

''முன்னரே பாசறை நள்ளினள் உன்னிளம் மோகக் கருவிழியாள்'' என்றும் 1950 ஆம் ஆண்டிலேயே பாடியுள்ளார்.

அக்காலத்தில் அரசினால் திட்டமிட்டு ஆரம்பிக்கப்பட்ட சிங்களக் குடியேற்றங்களுக்கு ஒரு எதிர்ப்பண்பாட்டை உருவாக்கிக் கொள்வது தில்லைச்சிவனின் கவிதைகளில் காணப்படும் மரபாகும். நாடில்லாத் தமிழர் என்ற பாடலில் ''எறும்புக்கும் புற்றுண்டு தமிழர்க்கென்று ஒரு நாடு இல்லை'' என்று தனது ஆதங்கத்தை வெளிப்படுத்துகிறார்

தமிழக் கவிதை மரபிலே இருக்கிற அநீதிகளுக்கு எதிரான எதிர்ப்புணர்வையும் விடுதலை மனப்பான்மையை கருத்தில் கொள்ளாமல் காதலையும் சிங்கார ரஸங்கள் ததும்பும் பாடல்களையும் பாடுவது சிங்களப் பேரினவாதத்துக்கும் அந்நிய கலாசார ஊடுருவலுக்குமே வழிவகுக்கும். ஈழத்துக் கவிஞர்கள் தமிழ்க் கவிதை மரபில் இருந்து விடுதலை உணர்வை இன்பம்கண்டுவளர்ப்பதுதான் சரியானது என்கிறார் தில்லைச்சிவன்

★ ★ ★

தி. சிவகாமி (தில்லைச்சிவம்) ஓர் இளைப்பாறிய தலைமை ஆசிரியர். ஈழத்தமிழ் இலக்கியத்தின் அரை நூற்றாண்டு கால வரலாற்றை தனது மனக்குகையில் பதுக்கி வைத்திருக்கும் தில்லைச்சிவனின் இலக்கிய காவியங்கள் இன்றும் முழுமையாக நூல் உருவம் பெறவில்லை. ஒரு பட்டியல் போட்டுக் கொண்டு தேட முயற்சித்தால், 1947 முதல் இலங்கையிலும், தமிழ்நாட்டிலும் பல பத்திரிகைகளில் இவரது ஆக்கங்கள் வெளிவந்துள்ளன என்பது தெரியவரும் மறுமலர்ச்சி பரம்பரை எழுத்தாளர் தி. ச. வரதராசாவின் அறிமுகத்தோடு ஈழத்து இலக்கிய உலகிற்கும் பரிச்சய மானவர். இவரது முதலாவது கவிதைத் தொகுதியாய் கனவுக்கன்னி 1961 இல் வெளிவந்தது. தாய் (1970), பாலர் பாட்டு (1988) ஆகிய கவிதை நூல்களையும் வெளியிட்டுள்ளார். என்பது குறிப்பிடத்தக்கது. தில்லைச்சிவன் ஈழத்து இலக்கிய உலகம் பெருமைப்படக் கூடிய ஒரு மூத்த படைப்பாளி.

தில்லைச்சிவன் அறுபத்தி நான்கு வயது நிரம்பிய மூத்த கவிஞர் என்ற செய்தியை விட, அவருடைய பாடல்கள் காட்டும் கலாசாரமும் மண்வாசனையும் காலத்தின் தேவைகளை உணர்த்துகின்றன, அவர் கூறுகிறார்: மாறிக் கொண்டே போகிறது. நேற்றுப் போல் இன்றில்லை, புதிய சிந்தனை, புதிய முயற்சி, புதிய மாற்றங்களை உலகம் முழுவதும்

[6 ஆம் பக்கம் பார்க்க]

உரையாடல் தொகுப்பு: மதன்

## தமிழ்க் கவிதை

காண்கிறேன். லத்தீன் அமெரிக்க நாடுகளிலும், ஆபிரிக்க நாடுகளிலும் மக்களின் விடுதலைப் போராட்டங்களுக்கு உறுதுணையாகக்கவிஞர்களின் ஆக்கங்கள் உள்ளன. அடுத்து வரவிருக்கும் வெற்றியின் படிக்கட்டுகளாகும். கவிதைகள் எமது இளைஞர்கள் இன்று ஆக்கி வருவது எனக்கு மனநிறைவைத் தருகிறது.

### இலக்கிய உலக அறிமுகம்

என்னால் எப்படிக் கவிஞனாக முடிந்தது?- இந்தக் கேள்விக்குப் பதில் சொல்வதென்றால் என் பாட்டனாரின் ஊக்குவிப்புத்தான் காரணம், அப்போது சிறுவனாக இருந்த காலத்தில் பாரதம், நளவெண்பா, பெரியபுராணம் இராமாயணம், கந்தபுராணம் பாடல்களை என் பாட்டனார் வாய் மொழியாகக்கேட்டும், படனம் செய்து ஒப்புவிக்கவும் தொடங்கினேன். இதன் பயனாக பதினான்கு பதினைந்து வயதில் விருத்தங்களைப் பாடவும், நண்பர்களுக்குப் பாடிக் காட்டவும் தொடங்கினேன்

1945 ஆகஸ்ட்மாதம் நடந்த சிரேஷ்ட்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியடைந்த பின், ஆங்கிலம் படிப்பதற்காக யாழ் வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் சேர்ந்தேன். எனக்கு ஆங்கிலத்தில் நாட்டம் ஓடவில்லை இலக்கியக் கூட்டங்களுக்கும் நண்பர்களைச் சந்திப்பதற்குமாகத்திரியலானேன். யாழ்கஸ்தூரியார் வீதியில்உள்ளநண்பர் டொமினிக் ஜீவாவின் கடையில் அக்காலத்தில் இலக்கிய ஆர்வமுள்ள இளைஞர்கள் அடிக்கடி கூடுவோம். நான், வை. தியாகராசா, சில்லையூர் செல்வராசா, என். கே ரகுநாதன் எஸ். பொன்னுத்துரை, கே டானியல், புதுமைலோலன், நாவேந்தன் - இன்னும் சிலர் கலந்து கொள்வோம். என்னை இலக்கிய உலகில் அடியெடுத்து வைக்க உதவியவர்கள் முறையே மறுமலர்ச்சி தி. ச. வரதராசா, ஈழகேசரி ஆசிரியர் இராச அரியரெத்தினம், சுதந்திரன் ஆசிரியர் எஸ் ரி. சிவநாயகம் என்று பெருமைப்பட்டுக் கொள்கிறார்.

கவிதைக்கு அப்பாலும் ஒரு உலகம் இருக்கிறது என்பதை உணர்ந்து 1949 — 1950இல் நானும், நண்பர் வை. தியாகராசனும் இணைந்துதமிழன் என்ற சஞ்சிகையையும், 1952 நானும் நண்பர்கள் கே. வி. இராசரத்தினம், இ இரத்தினசபாபதி என்பவர்களுமாக கலைச்செல்வி என்ற திங்களிதழ் ஒன்றினை வெளிக்கொணர்ந்தோம் என்று தனது அனுபவத்தைப் பதிவு செய்து கொள்கிறார்.

''எழுதிச் செல்லும் விதியின் கை எழுதிச் செல்லும்'' என்பார்கள் கவிதை உலகில் தில்லைச் சிவன் ஓர் அடி ஓய்ந்த பம்பரம் என்று இல்லாமல் அவர் ஆக்கங்களைதமிழன்பர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

### விண்வெளி

விண்வெளியில் ஆய்வுகள் தொடருகின்றன, விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் மத்தியில் சர்ச்சைக்குரிய தகவல்கள் அடிக்கடி பரிமாறப்பட்டு வருவதை தவிர்க்க முடியாதுள்ளது,

### சாம்பல்மேடு

தது வானத்தை நிமிர்ந்து பார்த்துக்கொண்டே நடந்தார்கள்,

ஐயோ சித்தி எங்க .. மாமி எங்க என்ற குரல்கள் பதற்றத்துடன் ஆளை ஆள் தேடிக் கொண்டிருந்தன.

கொஞ்சம் தூரம் வந்ததும் ஆச்சியின் பேரன் கணேசு வந்தான்.

''கணேசு! எங்கட பிள்ளையள் எங்க ..''

கோவாலு வீட்டில ஆச்சியோட இருக்குதுகள் ..''

மனப்பதற்றம் கொஞ்சம் தணிந்தது.

வேகமாய் நடந்தார்கள்.

கோவாலன் வீட்டு வேப்ப மர நிழலில் ஆச்சியுடன் மஞ்சுவும் பாலனும்...

''ஏய் மஞ்சு... ராசு எங்கடி?''

திக்கென்று விழித்த மஞ்சு ''நான்... நான் தம்பியைக் கொண்டு வரேலை...'' என்றாள்.

அதிர்ந்து போன முருகையன் —

''கொண்டு வரேலையோ... என்னடி சொன்னாய் ..''என்றான் 'நீயல்லோ பிள்ளையைத் தூக்கிக்கொண்டு போயிட்டாய் எண்டு நினைச்சு நான் இதுகளை கூட்டி வந்திட்டன். பெட்டை தண்டு போற பயத்தில தம்பியைத் தூக்க மறந்திட்டுது ..'

''ஐயோ ஆச்சி பிள்ளை ஏணைக்குள்ள ..''

முருகையன் பதறிக் கொண்டே திரும்பி ஓடினான்,

இப்போது ஷெல் வேகமாய் தொடராய் வந்து விழுந்து வெடித்துக் கொண்டிருந்தது.

அரைத் தூரம் ஓடி வர ''எங்க போறாய் முருகு...

''ஊருக்குள்ள போகாதை. ஒரே செல் வந்து விழுகுது ..' என்று இரண்டு மூன்று பேர் சொன்னது அவன் காதில் விழவில்லை.

பின் வயலால் பாய்ந்து விழுந்து ஓடி முருகன்கோவில் வரை வந்துநின்று மூச்சு விட்டான்.

எதிரே ஊர் நடுவே திட்டுத் திட்டாய் புகை மண்டலம் ..

குறுக்கு ஒழுங்கையால் பாய்ந்து தன் வீட்டுப்பக்கம் ஓடினான். வீட்டுக்காணிக்கு கிட்டப் போனவன் விக்கித்துப் போய் நின்றான். வீடு அமைந்திருந்த கால்ஏக்கர் காணியே எரிந்து போய் சாம்பல் மேடாய் கிடந்தது. மரம் செடி குடிசை எதையுமே காணவில்லை.

ஐயோ என்ர செல்வம் என்ர குஞ்சு ..

ஆள் அரவம் இன்றி வெறிச்சிட்டுப்போன அந்தக் கிராமத்தில் அவனது கதறல் மட்டும் தனியாகக் கேட்டது

---

## 2-ம் ஆண்டுநினைவலைகள்





காசிலிங்கம் சிவபாலன் (மாம்பழம்) மலர்வு:18-05-1963

செல்வரத்தினம் செல்வகுமார் (ராசன்) மலர்வு: 23 06-1966

உதிர்வு: 07-08-1990

தேசப் பற்றும்
இனத்தின் விடுதலையும்
உம்மில்
எண்ணங்களாய் செயலாய் கிளர்ந்திருந்தது.
அதனதன் தேவைக்காய்
பணிபுரிந்தீர்,
செயலின் போது மரணித்தீர்
வரும் விடுதலையில்
உமது நினைவுகளும் இருக்கும்.

— குடும்பத்தினர், நண்பர்கள்.

நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம். (சி/4836)

---

## 1ஆம் ஆண்டுத் திவசம்



வீரஜனனம் 03 - 09 - 1973

வீரச்சாவு 21 - 07 - 1991

### லெப். இளஞ்செழியன் (வாஞ்சி)

(யோ. அரவிந்தன்)

(ஆனையிறவு புல்லாவெளி களப்போரில் வீரச்சாவெய்தினார்)

திதி: 07-08-92

மகனே !
நீ ஒரு காலத்தில் ..
பாடித் திரிந்த பனந்தோப்பும்
ஓடிக் களித்த மாந்தோப்பும்
அப்படியே இருக்கின்றன
எதிரியின் எறி குண்டுகள்
ஊடுருவிச் சென்றதால் ஏற்பட்ட...
ஒரு சில... சிராய்ப்புக்களைத் தவிர...
ஆனால் நீ மட்டும்
இங்கில்லையே — உன்
காலடி பட்ட மண்ணில்
காது வைத்துக் கேட்கிறேன்...
அது மட்டும்தான் சொல்கிறது ..
நீ இங்கேதான்
இருக்கின்றாய் என்று...!

— 'நெருப்பு மழை'யில் இருந்து

இன்று நடைபெறும் ஆண்டுத்திவசத்தில் கலந்து கொள்ளுமாறு போராளிகள். உறவினர், ஊரவர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.


(தனிப்பட்ட அழைப்புகள் இல்லை)

- குடும்பத்தினர்

மயிலியதனை,
தொண்டைமானாறு. (சி 4806)

---

## ஓராண்டு நினைவஞ்சலி



வீரஜனனம் 22 - 03 1973

❀ ❀ ❀

வீரச்சாவு 21 - 07 - 1991

### வீரவேங்கை நிசாந்தன்

( இராசதுரை நந்தகுமார் )

திதி : 07 - 08 - 1992

அன்பின் தம்பியே
நீ எங்கள் தெய்வமடா!
நீ எம்மைப் பிரிந்துமடா
ஓராண்டும் மறைந்ததுவே
காலங்கள் பலகோடி
ஓடோடி மறைந்தாலும்
நீ எங்கள் நெஞ்சமதில்
என்றென்றும் உறைந்திருப்பாய்!


07 - 08 - 1992 இன்று எமது இல்லத்தில் நடைபெறும் கிரியையில் சகபோராளிகள், உற்றார், உறவினர்களை கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

பெற்றோர், சகோதரர்கள், உற்றார், உறவினர்.

ஞானவைரவர் வீதி,
உரும்பராய் கிழக்கு. ( 2958 )

---

## ஓராண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 12 - 9 - 1966

ஆனையிறவு மண்ணில் 21 - 7 - 1991

### வீரவேங்கை ரவி

(கனகசபை ரவீந்திரன்)

திதி: 07 - 08 - 1992

எம்குடும்பத்தின் குலவிளக்கு
நீ என்று நினைந்திருந்தோம்
ஆனால் மகனே .....
தமிழ் குலத்தின் விடிவிளக்கு
நான் என்று புறப்பட்டு
புதியோர் புறம்படைத்தாய்
உன் இலட்சியப் பாதையில்
பாதம் பதித்துவரும்
பல்லாயிரம் புலி வீரர்
முகத்திலே உன்னைப் பார்க்கிறோம்
நீ மடிய வில்லை மறைய வில்லை ......

புத்தூர் கிழக்கு
புத்தூர்

குடும்பத்தினர், உற்றார், உறவினர், நண்பர்கள்

(2972)

# யாழ்ப்பாணத்துக்கான சமர்

மங்கள முனசிங்க பாராளுமன்றத்தெரிவுக்குழுவின் தலைவர். இவருடைய மனைவி ஒரு தமிழ்ப்பெண். இவர்களுடைய 'சீதனவீடு' யாழ்ப்பாணத்தில் நல்லூர்ப் பகுதியில் இருப்பதாகக் கூறப்படுகிறது. யாழ்ப்பாணத்திலிருந்து தன்னை சந்திக்க வருபவர்களிடம் சில சமயம் முனசிங்க தனது சீதன வீட்டைப்பற்றி விசாரிப்பதுண்டாம் நல்லூரில் முனசிங்காவின் சீதனவீடு பத்திரமாகத் தான் இருக்கிறது ஆனால் அவருடைய நாடுதான் குருதி சிந்தும் அதன் வழியிலேயே தொடர்ந்தும் செல்வதென்று பிடிவாதமாய் உள்ளது.

தெரிவுக்குழு இன்றுஒரு வதந்தி போல ஆகிவிட்டது. தீர்வுக்கான ஆயத்த அடிகளை எடுத்துவைக்கும் துணிச்சல் அவர்களில் எவரிடமும் கிடையாது கொழும்பிலிருந்து வரும் தகவல்களின்படி, ஜனாதிபதி பிரேமதாஸ 'சமாதானத்திற்காக' மேற்கொள் எக்கூடிய எந்த ஒரு முன் முயற்சியையும் தடுத்து நிறுத்துவதற்கு எதிர்க்கட்சிகள் தயாராக இருப்பதாகக்கூறப்படுகிறது. ஜனாதிபதியைச் சூழ்ந்து எதிர்க்கட்சிகள் அமைத்திருக்கும் சமாதானத்திற்கு எதிரான இந்த வியூகத்தின் பின்னணியில் அயல்நாடொன்றும் சம்பந்தப்படுவதாக மேற்படிவட்டாரங்களில் கூறப்படுகிறது.

ஜனாதிபதி தன்னை ஸ்திரப்படுத்தும் முயற்சியில் இராணுவ உயர் பீடத்தில் மேற்கொண்ட மாற்றங்கள் போர் முனையில் துருப்புக்களைப்பல வீனப்படுத்தியுள்ளதாக பார்வையாளர்கள் கூறுகிறார்கள். இவ்வருடத்தில் ஏற்பட்ட இழப்புக்களில் மிக மோசமானவை கடந்த மாதத்தில் ஏற்பட்டன எனவே போர் முனையிலும் முன்னேற்றமில்லை .சமாதானத்தின் வழியிலும் முன்னேற்றமில்லை. ஜனாதிபதி என்ன செய்யப் போகிறார்?

இப்போது உண்டாகியுள்ள தேக்கத்தை உடைப்பதற்கு போர்அல்லாதவேறு வழிகளில் சிந்திப்பதற்கு கொழும்பில்ஒருவருமில்லை என்பது தெளிவு. எல்லோருமே யுத்தம் அதன் வழியில் தொடர்ந்து செல்லும் என்று தீர்மானித்து விட்டது போல் தெரிகிறது.

பலவேகய இரண்டின் பின் புலிகளை குடாநாட்டில், ஒரு சிறியவாய் உடைய போத்தலுக்குள் தள்ளிவிட்டதாக இராணுவம் நம்புகிறது. குடாநாட்டின் மீதான முற்றுகை ஒரு பருவகால முற்றுகைதான் என்பதும் அவர்களிற்குத் தெரிந்திருக்கிறது. எனவே அடுத்த கட்ட நகர்வு எதையும் மழைக்கு முன்பாகத் திட்டமிடவே அவர்கள் விரும்புவார்கள். செப்டம்பரிற்குள் யாழ்ப்பாணத்திற்குள் நுழைவது என்று அவர்கள் ஏற்கனவே திட்டமிட்டிருக்கிறார்கள். இத்திட்டம் கைவிடப்பட்டதற்கான ஆதாரங்கள் இதுவரை கிடைக்கவில்லை. அநேகமாக மழைவர முன்பாக யாழ்ப்பாணத்துக்கான சமரைஆரம்பித்தாக வேண்டும்.மழையோடு யாழ்ப்பாணத்திலுள்ள வெளிகளில் நீர் நிரம்பிவிடும். அப்போது, இன்று தரைப்படைக்குக் கவசமாகவும் பிரதான பலமாகவும் உள்ள டாங்கிகள் பருவகாலச் சதுப்பு நிலங்களினூடாக நகர வேண்டியிருக்கும். டாங்கிகள் கொள்வனவு செய்யப்பட்டபோது அவை நீர் நிலைகளிற்கூடாகவும் நகரக்கூடியவை என்று கூறப்பட்டது. எனினும், உணர்ச்சிகரமானதும் பிரதானமானதுமான ஒரு சமர் டாங்கிகளைப் பொறுத்தவரை பரீட்சார்த்த சமராக அமைவதை இராணுவம் விரும்புமா?

இராணுவப் பேச்சாளர்கள் கூறுவது போல அல்லது கொழும்பிலுள்ள விமர்சகர்கள் கூறுவது போல யாழ்ப்பாணத்துக்கான சமர் என்பது முழுக்குடாநாட்டையும் ஏக காலத்தில் தாக்கி புலிகளை முறியடித்து சிவில் அமைதியை ஸ்தாபிப்பதாக அநேகமாக இருப்பதற்கில்லை. பதிலாக, குடாநாட்டில், ஏதாவது ஒரு கேந்திர இடத்தைக் கைப்பற்றுவதே இராணுவத்தின் முதல் முயற்சியாக இருக்கும். தமிழர்களின் சுதந்திரப் போராட்டத்தின் நரம்பு மையமாகக்கூறப்படுவது யாழ்ப்பாணம். இங்கு விழும் பெரிய அடி தமிழர்களின் போராட்டத்தைத் தளரச்செய்து விடும் என்று இராணுவம் நம்புகிறது. யாழ்ப்பாணத்துக்கான சமர் எப்பொழுதும் பரபரப்பானதாகவும் உலகின் கவனத்தை அதிகம் ஈர்ப்பதாகவும் அமைந்து விடுகிறது. ஏற்கனவே இரு முறைகள் யாழ்ப்பாணம் தாக்கப்பட்டுள்ளது. முதலில் ஒபரேஷன் லிபரேஷன், பிறகு ஒபரேஷன் பவான். இவ்விரு தாக்குதல்களிலும் ஒன்றை அவதானிக்கலாம். இரண்டுமே முழுக் குடாநாட்டையும் ஏக காலத்தில் தாக்கி முழு நிலப்பரப்பையும் ஒரேயடியாக கைப்பற்றுபவையாக அமையவில்லை. ஏதாவது ஒரு கேந்திர இடத்தைக் கைப்பற்றுவதே முதல் இலக்காக இருந்தது. ஒபரேஷன் லிபரேஷனில் வடமராட்சி, ஒபரேஷன் பவானில் யாழ்நகரம். ஒபரேஷன் லிபரேஷனில் இந்தியர்கள்குறுக்கிடாதிருந்திருந்தால் இராணுவம் யாழ்நகரம் வரை வந்திருக்கும் என்று கொழும்பிலுள்ள விமர்சகர்கள் கூறினார்கள். ஆனால் தளபதி சிறில் ரணதுங்க குடாநாட்டில் சில கேந்திர இடங்களைப் பிடிக்க முடிந்தாலும் அவற்றைத் தொடர்ந்தும் காப்பாற்ற முடியாது என்று ஜனாதிபதி ஜெயவர்த்தன விடம் கூறினார். அதற்கு வேண்டிய ஆட்பலம் இராணுவத்திடம் இல்லை என்றும் அவர் கூறினார்.

(இதில் சில இளம் தளபதிகள்-(டென்சில் கொப்பேகடுவ விஜய விமலரட்ணா?) மூத்த தளபதியுடன் முரண்பட்டார்கள். அவர்கள் போரைத் தொடர விரும்பினார்கள்.) ஜெயவர்த்தன ஏன் ரஜீவுடன் ஒரு உடன்படிக்கைக்கு இணங்கினார் என்பதற்கு, ஜெயவர்த்தன கூறிய மூன்று காரணங்களில், மேற்படி சிறில் ரணதுங்காவின் அபிப்பிராயமும் ஒன்று என்று கூறப்படுகிறது இத்தகவல்களை சின்கா ரணதுங்க எழுதிய பயங்கரவாத அரசியல்; சிறிலங்காவின் அனுபவங்கள் (*Politics of Te rorism: Sri Lanka s Experience*) என்ற நூலில் காண முடியும்.

இந்தியர்கள் யாழ்நகரத்தை மூன்று அல்லது நான்கு நாட்களில் பிடித்துவிடலாம் என்று நம்பினார்கள். புலனாய்வு நிறுவனம் 'றோ' யாழ்ப்பாணத்தைப் பிடிக்க மூன்று நாட்கள் போதும் என்று கூறியது. ஆனால் மூன்று நாட்களின் பின்னரும் சமர் நீடித்தது. இது பற்றி சூரிய நாராயணன் தனது சமாதானப் பொறி (*The Peace Trap*) என்றநூலில் எழுதியுள்ளார். ஏன் மூன்று நாட்களில் யாழ் நகரத்தைப் பிடிக்க முடியவில்லை? என்பதற்கு இந்திய வெளியுறவு அமைச்சக அதிகாரி ஒருவர், விமானப்படையின் பலத்தைப் பிரயோகித்திருந்திருந்தால் அவ்வாறு முடிந்திருக்கும் என்று கூறினார் ஐ.பி.கே.எவ் தளபதி திபேந்தர் சிங், யாழ் நகரை நான்குநாட்களில் பிடிப்பதற்குத் திட்டமிட்டிருந்தார். அவர் எழுதிய சிறிலங்காவில் ஐ. பி. கே. எவ். (*IPKF in sriLanka*) என்ற நூலில் இத்தகவல் காணப்படுகிறது. ஆனால் எல்லாருடைய கணிப்பீடுகளிற்கும் அப்பால் ஓய்வற்ற பன்னிரெண்டுநாள் சமரின்பின்னரே யாழ்நகரம் வீழ்ச்சியுற்றது.

யாழ்ப்பாணத்துக்கான சமர் அநேகமாக யாழ்நகரத்திற்கான சமராகவே அமையக் கூடும் என்று பொதுவாக நம்பப்படுகிறது. இன்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் கொடிகளால் பாதுகாக்கப்படும் யாழ் நகரம் ஒரு வர்த்தக மையம் அல்ல. மெய்யான அர்த்தத்தில் கூறுவதானால் அது ஒரு ஆஸ்பத்திரி மையம். போதனா வைத்தியசாலையைப் பிடிப்பதன் மூலம் புலிகளை மருத்துவ வசதிகள் குறைந்த நிலைக்குள் தள்ளிவிட முடியும் என்று

## நிலாந்தன்

இராணுவம் நம்பக்கூடும். ஆனால், தாக்குதலிற்கு முன்பாக பாதுகாப்பு வலயத்தை அரசாங்கம் விலக்கிக் கொள்ள வேண்டும். ஒரு முன்னறிவித்தலோடு ஒரு குறிப்பிட்ட காலக்கெடு விதிக்கப்படுமிடத்து, ஐ. சி. ஆர். சி. பாதுகாப்பு வலயத்தை விலக்கிக் கொள்ள வேண்டியிருக்கும் என்று தகவலறிந்த வட்டாரங்களில் கூறப்படுகிறது. ஏற்கனவே, சேந்தான் குளம் பகுதியில் ஒப்புக்கொள்ளப்பட்டிருந்த பாதுகாப்பு வலயத்தை இராணுவம் முன்னறிவித்தல்கள்இன்றி மீறியதாகப் புலிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர். எனினும், யாழ்ப்பாணம் நகரப்பகுதி வெளியுலகின் கவனத்தை ஈர்க்கக் கூடிய பகுதி என்பதால் இங்கு சர்வதேச விதிமுறைகளைப் பகிரங்கமாக மீறுவது என்பது இராணுவத்தைப் பொறுத்தவரை சிக்கலானதாகவே இருக்கும்.

யாழ் நகரைப் பிடிப்பது என்று அவர்கள் தீர்மானித்தால் கோட்டைச்சமரின் அனுபவங்களைக் கட்டாயமாக நினைவு கூரவேண்டியிருக்கும். கோட்டைச் சமரில் மண்டைதீவிலிருந்து பண்ணைக் கடல் வழியாகத் திறக்கப்பட்ட போர்முனை அவர்களிற்கு எதிர்பார்த்த வெற்றியைத்தரவில்லை. கோட்டை முகாமைத் தொடர்ந்துபேண அவர்களால் முடியவில்லை. இம்முறை, யாழ் நகரத்திற்கான சமர்என்று வந்துவிட்டால் ஒரேசமயத்தில்பல போர் முனைகளைத் திறப்பது அவசியமானதாக இருக்கும். அவர்கள் யாழ் நகரிற்குள் நுழைவதற்கு அநேகமாக மூன்று வழிகள்தான் உண்டு. ஒன்று நகரின் தெற்கில் பண்ணைக்கடல் மற்றது, நகரின் தென்கிழக்குக் கரையோரத்தில் கிழக்கு அரியாலையை அண்டிய பகுதிகளில் கடல்வழியாக தரையிறங்கி நகரை நோக்கி நகர்வது. மூன்றாவது நகரின் மேற்குப் புறத்தில் திருவடி நிலையில் இறங்கி பொன்னாலை, அராலி, பொம்மை வெளியூடாக நகர்வது.

பண்ணைக்கடல் ஒரு பரவைக்கடலாகஅமைந்திருப்பது யாழ் நகரிற்கு இயற்கையால் தரப்பட்ட ஒரு கவசம் தான். கிழக்கு அரியாலைக் கடலும் ஈருடகத் துருப்புக்கள் தரையிறங்குவதற்கு வேண்டிய வசதிகள் குறைந்த கடல் தான். மேலும் அங்கிருந்து ஒடுங்கிய கரையோரம் வழியாகவேநகர வேண்டியிருக்கும். குடியிருப்புக்களிற்கு அருகிலுள்ள மேற்படி ஒடுங்கிய கடற்கரைகளில் கட்டடங்களின் மறைவிலிருந்து குறிபார்க்கும் புலிகளின் துப்பாக்கிகளைத் தாண்டி வர வேண்டும் இன்று இராணுவம் வெளிகளிலேயே தனது வெற்றிகளை உறுதிப்படுத்தக்கூடியதாக உள்ளது.

எனவே, நகரின் மேற்குப் புறத்திலிருந்து நகர்வது தான் தங்களிற்கு அதிகபட்சம் பாதுகாப்பானது என்று அவர்கள் நம்பக்கூடும். மேலும் ஆழமான திருவடி நிலைக் கடல் கடல்வழித் தரையிறக்கத்திற்குச்சாதகமானது எனவும்அவர்கள் சிந்திக்கலாம் குடியிருப்புக்களிலிருந்து தொலைவிலிருக்கும் மறைப்புக்களற்ற தொடரான வெளி நகரின் மேற்குப்புறத்தில் காணப்படுகிறது. அதோடு இந்தத் தொடரான வெளிகளிற்கு (பொன்னாலை, அராலி, பொம்மைவெளி, காக்கை வெளி) நேரெதிரில் உள்ள ஊர்காவற்துறை, லைடன் தீவுகள் ராணுவத்தின் பிடியிலேயே உள்ளன. அங்கிருந்து உடனடி உதவிகளைப் பெறுவது அவர்களிற்குச் சுலபம் எனவே மேற்குத்திசையிலிருந்து நகரை நோக்கி நகரும் அதே நேரம் நகரின் தென்திசையில் பண்ணைக் கடல் வழியாக ஒரு போர் முனையையும் திறப்பதன் மூலம் வெற்றியை உறுதிப்படுத்த முடியும் என்று ராணுவம் நம்புவதற்குரிய வாய்ப்புக்கள் அதிகம் உண்டு.

எனினும் இறுதி முடிவு அரசியல் வாதிகளிடமே விடப்படும்யுத்தத்திலும்சமாதானத்திலும் இன்று உருவாகியுள்ள தேக்கத்தை உடைப்பதற்கு ஒரேவழி யாழ்ப்பாணத்தைத் தாக்குவதுதான் என்ற முடிவுக்கு அவர்கள் வந்து சேரலாம். கொழும்பிலிருந்து கொண்டு இது இறுதி யுத்தம் என்று பிரகடனம் செய்யவும் அவர்களால்முடியும் ஒபரேஷன் லிபரேஷனில் ஜெயவர்த்தன அவ்வாறுதான் கூறினார். இது "தீர்த்துக் கட்டுவதற்கானயுத்தம்"

("*Fight to a Finish*")என்று அவர் கூறினார். ஆனால் நிச்சயமாக இது இறுதிச் சமராக இருக்கப் போவதில்லை. இது ஒரு தாய்ச்சமர். பின் நிகழப் போகும் நீண்ட தொடரான பழிவாங்கல்கள் நிறைந்த சமர்களிற்கெல்லாம் தாயான சமர் இது. இதன் பின் தமிழர்களிடம் சமாதானத்தைப் பற்றிய மயக்கங்களோ, கற்பனைகளோ இருக்கப்போவதில்லை. சிங்களவர்களோ, பிரச்சினையை இலங்கைத் தீவுக்குள் தீர்க்கத் தவறியதற்காக பிறகொருகாலம் கவலைப்பட வேண்டியிருக்கும்.

---

## ராணுவம்

உயிரிழந்தார்.

இ. ராஜ்தமார் (வயது 10), சி. சுபேசன் (வயது 12), க நிரூபா (வயது 10), நிஷாந்தினி (வயது 10), கு. குணதீபன் (வயது 10), சி. சிவரஞ்சனி (வயது 10), ம. ஐங்கரன் (வயது 10), வள்ளிபபிள்ளை (வயது73,ஏழாலை) ஆகியோர் படுகாயமடைந்தனர் இவர்கள் அனைவரும் யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை தீவகத்தில் நிலைகொண்டிருக்கும் சிறிலங்காஇராணுவத்தினர் அராலிப்பகுதியைநோக்கி தொடர்ச்சியான எறிகணைத் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

நேற்று நண்பகல் 12.00மணி முதல் தொடர்ச்சியாக ஒரு மணி நேரமாக இத்தாக்குதல் நடைபெற்றது அராலி தெற்குப் பகுதிகளிலும் கடற்கரையோரப் பகுதிகளிலும் பல எறிகணைகள் வீழ்ந்து வெடித்தன. இத்தாக்குதலினால் பெரியளவிலான சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை.

அத்தோடு பூனகரி இராணுவ முகாமிலிருந்து நல்லூர் பகுதியை நோக்கி பலத்த எறிகணைத் தாக்குதலை இராணுவம் மேற் கொண்டது. இதன் காரணமாக கிளாலிப் பாதை போக்குவரத்துப் பாதிக்கப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதேவேளை இப்பகுதியில் இடம் பெற்ற எறிகணை வீச்சினால் ஏற்பட்ட சேதவிபரம் தெரியவரவில்லை. (9),(11),(க)

## பலாலியில்

உயர் மட்டத்தில் இப்பொழுது மேற்கொள்ளப்படுகின்றது என்றும்,

யாழ். குடா நாட்டை மீட்டெடுக்க வேண்டுமானால் விடுதலைப் புலிகளுக்கு எதிராக பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்று எடுக்கப்பட்ட வேண்டும் என்று இராணுவத்தினர் உணர்ந்துள்ளனர் என்றும், அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

அத்துடன் போர் நேரத்தில் பொதுமககளை பாதுகாப்பதற்காக இந்த யுத்த கால சிவில் நிர்வாக அமைப்பு ஒன்றை பலாலியில் உருவாக்க இராணுவம் விரும்புவதாகவும் அப் பததிரிகை மேலும் குறிப்பிட்டுள்ளது.

உணவு, சுகாதார, சமூக நடவடிக்கைகள் நிறைவேற்றி அவர்களை போஷிக்கவே இந்த யுத்தகால சிவில் நிர்வாக அமைப்பு உருவாக்கப்படவிருககிறது என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

## விமானத்திலிருந்து

ளன.

இப்பகுதியில் சிதம்பரப்பிள்ளை திவ்வியமூர்த்தி என்பவரின் வீடு இக்குண்டுத் தாக்குதலினால் முற்றாக எரிந்து சாம்பலானது.

அங்கிருந்த உலோகப் பொருள்களைக்கூட இச்சன்னங்கள் துளைத்துள்ளன. பல யார் தூரத்திற்குச் சன்னங்கள் சிதறிப் பறந்து விழுந்திருந்தன. (தி)

## தெரிவுக்குழு கூட்டம்

பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் அடுத்த கூட்டம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை 11ஆம் திகதி இடம்பெறும் என கொழும்பிலிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## விமான

விமானங்களும் உலங்குவானூர்திகளும் அங்கும் இங்கும் பல தடவை பறந்து சென்றதை அவதானிக்க முடிந்தது. அத்துடன் பலாலி விமானத் தளத்திலும் விமானங்கள் பல தடவை தரையிறங்கிச் சென்றதையும் அவதானிக்க முடிந்தது. (09), (க), (ச)

## இராணுவத்தின்

வம் இழந்திருக்கிறது.

இதேவேளை வடமாகாணத்தில் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளை பிற பகுதிகளில் இருந்து துண்டித்து விடும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் இராணுவத்தின் போக்கைத் திசை திருப்பவே தாக்கிவிட்டு மறையும் கெரில்லாப் போர் முறையை புலிகள் கிழக்கு மாகாணத்தில் கையாள்வதாக இராணுவ பிரிகேடியர் தயா விஜயசேகர தெரிவித்துள்ளார்.

இராணுவத் தரப்பின் உயிரிழப்பு மிக அதிகம் என்பதால் இராணுவம் புதிய போர் முறைகளைத் திட்டமிடுவதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

ஆனால் புதிய போர் முறைகள் என்ன என்பதைக் கூற அவர் மறுத்து விட்டார்.

அதிபர்கள், ஆசிரியர்களுக்கான

## கலந்துரையாடல்


"எமது பாரம்பரிய வளங்கள் அழிந்துகொண்டு போகின்றன; கடும் வரட்சி, இயற்கை அனர்த்தங்கள், போர்காலச் சூழ்நிலைகள் ஆகியவற்றினால் எமது முன்னோர்கள் வளர்த்த மரங்கள் பெருமளவில் அழிந்து விட்டன." இந்நிலையில் மிகவும் விழிப்பாக செயற்படவேண்டிய அவசியம் அனைவருக்கும் உண்டு.

**மரநடுகையை ஊக்குவிக்குமுகமாக . . .**

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் யாழ். மாவட்டத்திலுள்ள பாடசாலை மாணவர்கள், பாடசாலைகள் பங்குகொள்ளும் 30 இலட்சம் ரூபா பெறுமதியான மரநடுகைப் போட்டித் திட்டமொன்றை நடைமுறைப்படுத்த தீர்மானித்துள்ளது.

இத் திட்டம் தொடர்பாக ஆர்வமுடைய அதிபர்கள், ஆசிரியர்களுடைய விரிவான ஆலோசனைகளை எதிர்பார்த்து, 09-08-1992 அன்று காலை 10-00 மணியளவில் எமது தலைமைப் பணிமனையில் நடைபெறவிருக்கும் கலந்துரையாடலில் பங்குகொண்டு ஆலோசனைகளை வழங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**"மரம் நடுவோம், சூழலைப் பாதுகாப்போம்"**



செயலாளர்,
தமிழர் புனர்வாழ்வுச் கழகம்,
83|2,
காங்கேசன்துறை வீதி,
கொக்குவில்.

(2978)

## ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு
25 - 05 - 1973



வீரச்சாவு
21 - 07 - 1991

**வீரவேங்கை நளினி**
மேகலா [கோமதி] இரத்தினராசா
திதி:- 07. 08. 1992

பன்னிரு மாதங்கள் சென்றாலும்
உமது நாமம் எம் நெஞ்சிலிருந்து மறையவில்லை
விழலுக்காக இல்லாமல்
தமிழீழ மண்ணுக்கே உயிர்நீத்து
மாவீரர் வரிசையில் இடம் பெற்று விட்டீர்
உமது ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கும்

ஜெயந்திநகர்,
கிளிநொச்சி

பெற்றோர், சகோதரர்,
உறவினர், நண்டர்கள்.
(2975)

## மரண அறிவித்தல்

நாட்டுக் கூத்து கலைவேந்தன்

**அண்ணாவியார் யோண்பிள்ளை பிரான்சீஸ்**

யோண்பிள்ளை பிரான்சீஸ் அண்ணாவியார் 6. 8. 92இல் காலமாகிவிட்டார். இவர் லூர்துமேரி அவர்களின் அன்புக் கணவரும், இரத்தினராசா, அன்ரன், ஜெயபாலன், டயஸ், சுகந்தா (ஜேர்மனி), காலஞ்சென்ற தங்கன், செல்வமணி ஆகியோரின் அன்புத் தந்தையும், சாந்தியின் மாமனாரும், தரிசிக்கா, றொசாந்தன் (ஜேர்மனி) ஆகியோரின் பேரனாரும், கடற்புலியைச் சேர்ந்த வனிதா (வான்மதி) ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார். அன்னாரின் பூதவுடல் (இன்று) 7.8.92 பி. பகல் 4 மணிக்கு மாதகல் புனித தோமையார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

துறைமுகம்
மாதகல்
(சி/4841)

தகவல்
செ. அன்ரன் குணதாஸ்
(மைத்துனன்)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 07 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# "இலங்கைக்குத் திரும்பிப் போ"

# தமிழக அதிகாரிகள் வற்புறுத்து

## திருமலை திரும்பிய அகதி தெரிவிப்பு

"இலங்கைக்குத் திரும்பிப் போ. அல்லது நீ தமிழ்நாட்டில் இருக்கும்வரை அகதிமுகாமிலேயே இருக்கவேண்டியிருக்கும்" என்று இந்திய அதிகாரிகள் அச்சுறுத்தியதாக நாடு திரும்பியுள்ள ஓர் அகதி பி.பி.சி. நிருபரிடம் கூறினார்.

அகதிகளுக்கான ஐ. நா. உயர்ஸ்தானிகராலய அதிகாரிகள் மேற்பார்வையில் திருக்கோணமலை திரும்பிய ஈழத் தமிழ் அகதி ஒருவரே இவ்வாறு கூறினார்.

சிறிலங்கா அரசு அகதிகளை இராணுவத்தின் கட்டுப்பாட்டிற்குள் இல்லாத பகுதிகளில் அனுமதித்துள்ளது. உள்நாட்டுப் போரிலிருந்து தப்புவதற்காக இந்தியாவுக்குச் சென்ற தமிழர்கள் சண்டை நடக்கும் பகுதிகளுக்கேஇராணுவத்தால் திருப்பி அனுப்பப்படும் நிலை உருவாகியுள்ளது. இவ்வாறு பி.பி.சி மேலும் தெரிவித்தது.

இதேவேளை தமிழ்நாட்டில் இருந்துஇலங்கைத்தமிழ் அகதிகள் 127பேர் நேற்று இந்தியன் எயர்லைன்ஸ் விமானத்தில் சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்திலிருந்து திருக்கோணமலைக்குக் கொண்டுவரப்பட்டனர்.

நேற்றுதிருக்கோணமலைக்கு வரவிருந்த அகதிகளில் மூவர் இந்திய அதிகாரிகளால் தடுக்கப்பட்டதாகவும், ஒருவர் காணாமல்போனதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## 3,20,000 பரீட்சார்த்திகள்

(கொழும்பு)

ஆண்டு ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை ஆகஸ்ட் 23ஆம் திகதி நடைபெறவுள்ளது. நாடு பூராகவும் 3,20,000பரீட்சார்த்திகள் இப்பரீட்சைக்குத் தோற்றவுள்ளார்கள்.

இம்முறை வழமையான எண்ணிக்கையைவிட அதிகமான பரீட்சார்த்திகள் இப்பரீட்சைக்கு தோற்றுகின்றார்கள் என்று பரீட்சை ஆணையாளர் ஆர்தர் வெதமுல்ல தெரிவித்தார்.

## சாரணர் விசேட கூட்டம்

4 ஆவது தேசிய சாரணர் ஜம்போறியில் பங்குபற்ற விரும்பும் சாரணர்கள், திரிசாரணர்கள், சாரணத்தலைவர்கள், குழுச்சாரணத்தலைவர்கள் உதவிமாவட்டஆணையாளர்களுக்கான விசேட கூட்டம் நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் இன்றுபி ப. 3. 30 மணிக்கு நடைபெறும். சகலரையும் தவறாது சமுகமளிக்கும்படி மாவட்ட ஆணையாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## பிற்போடப்பட்டுள்ளது

யாழ். மாவட்ட சித்திரம் கற்பிக்கும் ஆசிரியர் ஒன்றியத்தின் பொதுக் கூட்டம் பிற்போடப்பட்டிருப்பதாக யாழ். கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது.

மேற்படி கூட்டம் இம்மாதம் 13 ஆம் திகதி நடைபெறும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. இக்கூட்டம் நடைபெற உள்ள புதிய திகதி பற்றி பின்னர் அறிவிக்கப்பட உள்ளது. (க)

## விடைத்தாள் கொழும்பிற்கு

க. பொ த. உயர் தரப் பரீட்சையின் முதற்கட்ட விடைத்தாள்கள் திருத்த வேலைகளுக்காகக் கொழும்புக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளன. பருத்தித்துறையில் தரித்து நிற்கும் "குமண" கப்பல் மூலமே இவை அனுப்பிவைக்கப்படவுள்ளன. (க)

**இடம்பெயர்ந்த**

கையிருப்பிலுள்ள அரச சொத்துகள் பற்றிய உறுதிமொழியொன்றை சம்பந்தப்பட்ட கல்விப் பணிப்பாளருக்குச் சமர்ப்பிப்பதன் மூலம் இளைப்பாற அனுமதிக்கப்படுவார்கள்.

மேலும் பொருள் இழப்புக்கள், குறையும் அரசஉடைமைகள் பற்றிய பொருள் பதிவேடு அறிக்கையுடன், உதவி அரசாங்க அதிபரால் அத்தாட்சி செய்யப்பட்ட கிராம சேவகரின் அறிக்கையையும் சமர்ப்பிக்க வேண்டும் என்று சுற்றுநிருபம் தெரிவிக்கிறது.

இந்தச் சுற்று நிருபத்தினால் இராணுவ நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட பல பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்கள் ஒய்வூதியத்தை தடங்கலின்றிப் பெறும் நன்மையை பெறவுள்ளார்கள்.

**தொழிற்றுறை அபிவிருத்தி நிறுவனம்**

## உள்ளூர் உற்பத்திகளை தர நிர்ணயம் செய்யும்

(நமது நிருபர்)

தரமான உற்பத்திப் பொருள்களை உற்பத்தி செய்வதற்கு ஏற்றவகையில் உற்பத்தியாளரை வழிநடத்தல், தரமான பொருள்களை நுகர்வோர் பெற வழியமைத்தல் ஆகிய அடிப்படை நோக்கங்களை நடைமுறைப்படுத்துவதற்காக தொழிற்றுறை அபிவிருத்தி நிறுவனம் என்ற அமைப்பை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகம் அமைத்துள்ளது.

உள்ளூர் உற்பத்திப் பொருள்களை பகுப்பாய்வு செய்து தர நிர்ணயம் செய்யும் நடவடிக்கைகளை தொழிற்றுறை அபிவிருத்தி நிறுவனத்தின் தரநிர்ணயக் குழு மேற்கொள்ளும். இக்குழுவில், யாழ் பல்கலைக் கழகம் மற்றும் சுகாதாரப் பகுதியினர், பிறதுறை சார்ந்த நிபுணர்கள் இணைக்கப்பட்டுள்ளனர்.

பகுப்பாய்வுகள் யாழ். பல்கலைக்கழக மருத்துவ, விஞ்ஞான பீட ஆய்வு கூடங்களில் மேற்கொள்ளப்படும்.

இத் தகவல்களை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் தெரிவித்துள்ளது.

## ஏப்ரல் -யூனுக்கிடையில் மாகாணசபைத் தேர்தல்

(கொழும்பு)

மாகாணசபைத் தேர்தல்கள் அடுத்த ஆண்டு ஏப்ரல் - யூன் மாதங்களுக்கிடையில் நடத்தப்படும் என்று திட்டமிடல் அமுலாக்கல் ராஜாங்க அமைச்சர் டாக்டர் விமல் விக்கிரமசிங்கா தெரிவித்தார்.

1988 இல் மூன்று கட்டங்களாக மாகாணசபைத் தேர்தல்கள் நடைபெற்றது. அதுபோல் இம்முறை நடைபெறாது நாடு பூராவும் ஒரே நாளில் தேர்தல்கள் இடம் பெறும்.

கிரியெலவில் வைத்திய அதிகாரிகள் விடுதியைத் திறந்து வைத்துப்பேசியஅமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசு தேர்தலைப் பின்போடாது. 1970இல் இருந்து 22 வருடங்களில் ஒரு தேர்தலிலாவது நாம் தோல்வியைத் தழுவிக்கொள்ளவில்லை என்றார் அவர்.

**2ஆம் கட்ட**

ளது.

கொழும்பில் இருந்து நேற்று விமானமூலம் பலாலிக்கு கொண்டுவரப்பட்டிருக்கும் இவ்வினாத்தாள்கள் இன்று அங்கிருந்து யாழ். கல்வித் திணைக்களத்திற்கு எடுத்து வரப்பட உள்ளது. சர்வதேச செஞ்சிலுவைச்சங் சர்வதேசக் குழு அதிகாரிகள் இவ்வினாத்தாள்களை எடுத்துவருவதற்கு உதவுவர்என தெரியவருகிறது.

ஆண்டு ஐந்து மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சைக்கான வினாத்தாள்களும் இத்துடன் எடுத்து வரப்பட உள்ளதாகவும் கூறப்படுகிறது (க)

## விளை.போட்டி

(உரும்பராய்)

உரும்பராய் கிழக்கில் (யோகபுரம்) அமைந்துள்ள அண்ணா சனசமூக நிலையம் தனது 20வது ஆண்டுவிழாவை முன்னிட்டு எதிர்வரும் 10- 8- 92 திங்கட்கிழமை மாலை 2.00 மணிக்கு இவ் விளையாட்டுப் போட்டி ஒன்றை நடாத்த இருக்கிறது.

**முஸ்லிம்**

பாக தமிழ்க் கட்சிகளுக்கும் - முஸ்லிம்காங்கிரசிற்கும் இடையிலான அடுத்த கட்டச் சந்திப்பு வரும் ஞாயிற்றுக் கிழமை நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பாதுகாப்பு அம்சங்கள் எந்தெந்த அடிப்படையில் உறுதிப்படுத்தப்படும் என்பது பற்றி தமிழ்க்கட்சிகள் ஏற்கனவே முஸ்லிம் காங்கிரசிடம் கையளித்துள்ளதாம்.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

06-08-1992

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம் - 5161

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கங்கள்:
26-7234, 40-7299, 24-5087, 24-5529, 24-2655, 22-8855, 28-2145, 42-9345.

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கங்கள்:
27-7263, 41-9579, 27-9305, 24-9744, 41-9457, 40-7541, 27-5633, 28-3233, 41-8432, 26-4510, 41-9995, 27-2029, 24-9825, 41-9089, 24-4854, 26-9495, 27,9052, 26-5882, 26-5505, 26-3628, 27-5662, 42-9220, 24-5774, 25-7473